கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை'' எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!

தென்மொழி

சுவடி: 16 ஓலை: 10.
[நிறுவனம் தி. பி. 1990 (1959)]
விடை. தி. பி. உ௰கக-
மே-சூன்-1980.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார்
புரப்பாசிரியர்கள்
தென்மொழி முல்லைவாணன் (சிங்கை)
தென்மொழி மறை. நித்தலின்பனார் (தமிழ்நாடு)
கலைக்கோயில் மாணிக்கப் (சிங்கை)
தென்மொழி. ந. முத்துக்குமரன் (தமிழ்நாடு)
தென்மொழி மின் அச்சகம், சென்னை-5, தமிழகம்
[பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும்
பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன]

தினமணிக் கதிரின் திமிரான போக்கு!

மீண்டும் தீபம் நா. பார்த்தசாரதி தமிழினத் திற்குக் கேடான சில தில்லு மல்லுகளில் இறங்கியிருக்கிறார். பார்ப்பனர் க்கே உள்ள இயல்பான குறும்புகள் எவ்வளவு, படித் தாலும் அவர்களை விட்டுப் போகாது என் பதற்குத் 'தினமணி'ச் சிவராமன்களும், 'தீபம்' பார்த்தசாரதிகளும், 'துக்ளக்' சோக்களும் என்றென்றும் எடுத்துக் காட்டுகளாகவே இருப்பர். அண்மையில் தீபம் பார்த்தசாரதி, தமிழ் மக்களிடையே அழிந்து வரும் சாதிவுணர்வை மீண்டும் நிலைநிறுத்திக் கொள்ளும் அல்லது தூண்டிவிடும் வகையில், அவர் ஆசிரியர் பொறுப்பேற்று நடத்தும் தினமணிக் கதிரைச் சாதிச் சிறப்பிதழ்களாக வெளியிட்டு வருகிறார். **சௌராட்டிரா சிறப்பிதழ், நகரத்தார் சிறப்பிதழ்** என இரண்டு சிறப்பிதழ்களை இதுவரை தினமணிக் கதிர் வெளியிட்டிருக்கிறது. இனி அடுத்து 'ரெட்டியார் சிறப்பிதழ்' வெளிவருவதாக அறிவிப்பு வந்துள்ளது. சாதியின் பெயரால் இன்னும் என்னென்ன சிறப்பிதழ்களைக் கொணர விருக்கிறாரோ நமக்குத் தெரியாது.

பெரும்பாலும் பார்ப்பனர்கள் மற்றவர்களைச் சாதியின் பெயரைச் சொல்லி அழைப்பதிலே மிகவும் விருப்பமானவர்கள். என்ன ரெட்டியார், முதலியார் எங்கே காணோம், பிள்ளை அந்த வேலையைச் செய்தாரா, செட்டியாருக்கு என்ன குறைச்சல், கவுண்டருக்கு எப்படி அவ்வளவு கோபம் வந்தது, இருந்தாலும் நாய்க்கருக்கு இவ்வளவு அமர்க்களம் செய்திருக்கக் கூடாது—என்ற வகையில்தாம் பார்ப்பனர் பேச்சுகளில், வக்கணைகள், ஏசல்கள், குத்தல்கள் இருக்கும். இதற்கு என்ன கரணியம் என்றால், மற்றவர்களுக்கு அந்தந்தச் சாதி மறந்து போகாமல் நினைவூட்டிக் கொண்டிருக்க வேண்டும் என்பதொன்று; இரண்டாவது அவர்கள் தம்மை என்றென்றும் 'பிராமணர்' என்பதை மறந்து விடாமல் ஒப்புக்கொள்ள வேண்டும் என்பது! 'சூத்திரர்கள்' தாங்கள் அனைவரும் ஓரினம் என்பதை உணர்ந்து விட்டால், தங்களைப் பிராமணன் என்பதை ஒப்புக் கொள்ள மாட்டார்கள் என்பது ஆரியப் பார்ப்பனர்களுக்குத் தெரியும். எனவேதான் சாதியுணர்வுகள் மீண்டும் மீண்டும் தழைத்து வருகின்ற வகையில் அவர்கள் தண்ணீர் ஊற்றிக் கொண்டும் எருப் போட்டுக் கொண்டுமே என்றும் இருப்பார்கள். ஆகவேதான், சாதிப் பெயர்களைச் சொல்லி அழைப்பது, திருமண அழைப்பிதழ்களில் சாதிப் பெயர்களை விடாமல் சேர்க்க வேண்டும் என்று எழுதித் தருவது, பிறப்பியம் எழுதுகையில் சாதி மரபைத் தவறாமல் குறிப்பிடுவது, நீத்தார் நினைவு நாளில் சாதி நெறிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று வற்புறுத்துவது முதலிய நிகழ்ச்சிகளின் வழியாகச் சாதிகளின் நிலைகளை நமக்கு விடாமல் நினைவூட்டிக் கொண்டும் நிலைநாட்டிக் கொண்டும், அதன் வழித் தம்மைப் பிராமண நிலையினின்று தாழ்விக்காது நிலைநிறுத்திக் கொண்டும் பார்ப்பனர்கள் இருக்கிறார்கள்.

முறைப்படி அவர்கள் தம்மைப் 'பிராமணர்' என்று சொல்லிக் கொள்ளுகையில் நம்மைச் 'சூத்திரர்' என்றே சொல்லுதல் வேண்டும். அப்படித்தான் ஆண்டாண்டுக் காலமாய் நம்மைச் சொல்லிக் கொண்டும் வந்தார்கள். இப்பொழுது சமயம் வாய்க்கும் பொழுதெல்லாம் அல்லது அவர்களுக்குள் நம்மைச் சுட்ட வேண்டி வரும்பொழுதெல்லாம் 'அந்தச் சூத்திரன் இது செய்தான்' என்றே சொல்லியும் வருகிறார்கள். 'பிராமணர்' என்பது வருணச்சிரம முறைப்படி சாதிப் பிரிவு அன்று; குலப் பிரிவு. குலப் பிரிவால் அவனை அழைத்துக்கொள்ளும் அவன் நம்மைச் சாதிப் பிரிவால் ஏன் அழைக்கின்றான் எனில் இச் சாதிப் பிரிவுகளின் பெயர்கள் தொழிலடிப்படையில் தோன்றிய பெயர்கள் என்பது அவனுக்குத் தெரியும். மேலும் பிள்ளை, முதலி, செட்டி, இரெட்டி என்பவையெல்லாம் தூய தமிழ்ப் பெயர்களாகவே இருக்கும். இந்தப் பெயர்களால் நம்மை அழைக்க விரும்பும் அவன், சூத்திரன் என்ற பெயரால் நம்மை ஏன் வெளிப்படையாக அழைக்க விரும்பவில்லை யென்றால், அந்தப் பெயரின்

இழிவை நாம் உணர்ந்து விட்டோம் என்பதால்தான். கடந்தகாலத் திராவிட இன மீட்பு முயற்சிகளால் ஏற்பட்ட நன்மைகளுள் இதுவும் ஒன்று. 'சூத்திரன்' என்றால், தேவடியாள் மகன், வேசி மகன், அடிமை என்கின்ற பொருளெல்லாம் நமக்குத் தெரிந்து விட்டது என்பதை அவன் உணர்கிறான். அதனால்தான் சூத்திரன் என்ற பெயரால் நம்மை அழைக்காமல், தொழிற் பெயரடிப்படையில் அமைந்த பிரிவுப் பெயர்களையே சாதிப் பெயர்களாக ஆக்கி, அவற்றால் நம்மை அழைத்து வருகிறான். நாமும் அதில் ஏதோ 'செருப்பாலடித்த' பெருமை யிருப்பதாகக் கருதி அதை ஒப்புக் கொண்டு வருகிறோம். மற்றபடி அவன் பிராமணனா யிருக்கையில் நாம் சூத்திரர்தாமே என்பதை நாம் உணர்வதில்லை. அப்படி உணராமல் இருக்க சாதி நிலைகளால் ஏதோ ஒரு பெருமையிருப்பதாக நம்மை நம்ப வைத்திருக்கின்றான். அந்த நிலையை நாம் நன்றாக உணர வேண்டுமானால், அவன் சிலரைச் சிலவிடங்களில் பிள்ளை யென்றோ, முதலியார் என்றோ, ரெட்டியார் என்றோ வெறுமே அழைக்காமல், நாம் உவக்கும் வண்ணம் என்ன பிள்ளைவாள், முதலியார்வாள், ரெட்டியார்வாள் என்று அழைப்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். சாதிப் பெயரால் நம்மை அழைப்பது அல்லது அழைத்துக்கொள்வது இழிவு என்றோ தாழ்ச்சி என்றோ நாம்உணர்ந்தால் சாதி யமைப்புகளை நாம் கடைப்பிடிக்க மாட்டோம் என்பதால், உயர்வு என்று கருதும்படியே அவன் செய்து வருகின்றான். அதனால்தான் சாதிப் பெயரில் ஒரு கவர்ச்சியோ, பெருமையோ, ஓர் உயர்ச்சியோ இருப்பதாக நாம் கருதிக்கொண்டு, அதனை விட மனமில்லாமல் கடைப்பிடித்து வருகின்றோம். அறிவியல் வளர்ச்சியும், பொது நிலை மலர்ச்சியும் சிறந்தோங்கி வரும் இக்காலத்தில், என்னதான் சாதிப் பெயரில் ஒரு கவர்ச்சியோ, உயர்ச்சியோ இருந்தாலும், அதனைப் பாராட்டுக் கொள்வதில் அல்லது கடைப்பிடிப்பதில் ஒரு நாகரிகமோ, பொருளோ இல்லை என்று கருதும்படியான ஒரு நிலை வந்து விட்டதை உணர்ந்துதான், பார்த்தசாரதி முதலிய படித்த சூழ்ச்சிக்காரப் பார்ப்பனர்கள், அந்த உணர்வுகள் ஒரேயடியாக அழிந்து போய்விடாத வண்ணம், அதை மறைமுகமாக, கலை யெனனும் பெயராலும், இன வரலாறு (Social History) என்னும் பெயராலும் வளர்க்கத் தலைப்பட்டிருக்கின்றனர். இந்தக் கொலைகாரக் குறும்பை நாம் விளங்கிக் கொண்டு இதனை முளையிலேயே கிள்ளி யெறிதல் வேண்டும்.

பார்த்தசாரதி முதலியவர்கள் சாதிப் பெயர்களைக் கிண்டிக் கிளறுவதால் இருவகையான நன்மை பெறுகிறார்கள். ஒன்று. சாதிப் பற்று அல்லது வெறியுள்ள அந்தந்தச் சாதியார்கள் அவ் விதழைக் கட்டாயம் பேரளவில் வாங்குவார்கள். அவ்வகையில் மிகுந்த விற்பனையும் கொள்ளை ஊதியமும் கிடைக்கும். இஃது உடனடியான பயன். இரண்டு, அசைவுற்று வரும் பார்ப்பனர்

வகுத்த சாதி வேற்றுமைகள் நிலைநிறுத்தப்படும் இது மெதுவாக ஆனால் உறுதியாகக் கிடைக்கும் பயன். அதனால்தான் தினமணிப் பார்ப்பனர்கள் சாதி யிதழ்களைத் துணிவாக வெளியிட முனைந்து வருகின்றனர்.

இந்த நிலையை நாம் மேலும் வளர விடக் கூடாது. பார்த்த சாரதிக்குச் 'சாதி யிதழை வெளியிட வேண்டாம்' என்று கேட்டுக் கொள்ளும் கண்டன மடல்களை ஏராளமாக அனுப்பிவைக்க வேண்டும். அவற்றுக்குச் செவிசாய்க்க வில்லையானால் தினமணிக் கதிர்களை வாங்க வேண்டாம் என்று வாசகரிடத்திலும், விற்க வேண்டாம் என்று கடைக்காரர்களிடத்திலும் கேட்டுக் கொள்ள வேண்டும். மீண்டும் அவ் வேண்டுகோள்கள் கேட்கப் பெறாவிடத்து, கடைகளில் விற்பனை நடக்காத வண்ணம் மறியலில் ஈடுபடுதல் வேண்டும். எஃது எப்படியாயினும் சாதி நிலைகளுக்கு இக்கால் சிறிது தளர்ச்சி ஏற்பட்டு வருகிறது. போகப் போக இத்தளர்ச்சி வளர்ச்சி பெற்று சாதித் தவிர்ப்புணர்வுகள் மிகலாம். அதன்பின் சாதி யழிவுகள் தோன்றிப் படிப்படியாக ஒழிய வேண்டியதுதான். ஆனால் நம் முயற்சிகளுக்கெல்லாம் பெருந்துணையாகத் தமிழ் மொழியை வளர்ப்பதும் அதன் வழித், தமிழின வுணர்வை — நாமெல்லாம் ஒரே தமிழின மரபினரே என்றெண்ணும் நினைவை — வேரூன்றச் செய்வதும் மிக மிக இன்றியமையாதனவாகும். ஆங்காங்குள்ள தமிழறிஞர்களும், தமிழிளைஞர்களும், அன்பர்களும் ஒன்றுகூடித் திட்டமிட்டுப், பார்த்தசாரதிகளுக்கு நேர் எதிர் வினைகளில் இறங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம்.

—பெருஞ்சித்திரனார்.

மயிலை சீனி வேங்கடசாமியார் மாண்புறு நன்புகழ் நீடு வாழ்க!

அண்மையில் கடந்த 8-5-80-ஆம் பக்கல், தம் எண்பதாம் அகவையிற் மறைந்த வரலாற்றாராய்ச்சிப் பேரறிஞர் **மயிலை சீனி வேங்கடசாமியார்** அவர்கள் ஒரு தவமுனிவர் போல் வாழ்ந்தவர். ஆம்! அவர் செய்த தமிழ்த்தவம் மிகப் பெரியது. இக்கால் ஆராய்ச்சி என்பது செய்திகள் தொகுத்தலைப் போல் ஓர் எளிமை பெற்றுவிட்டது. ஆனால் மூதறிஞர் மயிலை சீனி வேங்கடசாமியார் அவர்களின் ஆராய்ச்சியோ சுரங்கம் வெட்டி மாழை காணும் ஓர் அரு முயற்சியாக வாணாள் முழுவதும் சிறந்து விளங்கியதை அவர் திறன் தெரிந்த ஒரு சிலரே அறிவர். அவர் இழப்பு தமிழியல் வரலாற்றுத் துறைக்கு நேர்ந்த ஒரு பேரிழப்பாகும். அவர் போல்

நுண்மாண் நுழைபுலமிக்க ஆராய்ச்சியறிஞரை இனித் தமிழகம் என்று காணுமோ?

16-12-1900-ஆம் நாள் சென்னை, மயிலாப்பூரில், புகழ் பெற்ற சித்த மருத்துவர் சீனிவாசனுர் அவர்கட்கு இரண்டாம் மகனுகப் பிறந்தார் வேங்கடசாமியார். இவர் தமையனுர் கோவிந்தராசன் தொடக்கத்தில் வேங்கடசாமி தம் தந்தையாரிடம் தமிழ் மருத்துவம் கற்ருர். தந்தை இவரை ஒரு சிறந்த மருத்துவராக்கிப் பார்க்க விழைந்தார். ஆனுல், இவர் தமையனுர் மிகச் சிறந்த தமிழ்ப் புலமை பெற்றவராதலால் அவரிடம் இவர் தமிழறிவே கைவரப் பெற்ருர். இவர் தமையனுர் திருமயிலை நான்மணிமாலை, திருக்குறள் காமத்துப் பால் நாடகம், பல தனிப் பாடல்களை எழுதியிருந்தார். எனவே இவரிடம் வேங்கடசாமியார், இலக்கிய இலக்கணம் கற்றுத் தமிழ் மேல் ஆராக் காதலுற்ருர். மருத்துவ அறிவோடு தமிழறிவும் சேர்ந்து நுணுகிய ஆராய்ச்சியறிவாக இவரிடம் மலர்ச்சி பெற்றது. இளமையில் இவரின் புலமையை மேலும் நன்கு ஒளிபெறச் செய்தவர் பேரா. ச. த. சற்குணர் என்னும் தமிழறிஞர்.

தொடக்கக் காலத்தில் ஓவியம் எழுதுவதிலும், கதைகள், வரலாறு படிப்பதிலும், இலக்கிய இலக்கணங் கற்பதிலும், புதிய புதிய சிறப்புமிக்க இடங்களைச் சுற்றிப் பார்ப்பதிலும் வேங்கடசாமி பேரார்வம் உடையவர். தம் 22-ஆம் அகவையில் சென்னையில் உள்ள ஓர் உந்துவண்டி உதிரி உறுப்புகள் விற்பனையகத்தில் கணக்கராகச் சேர்ந்து, சின்னுட்களில் விடுபட்டுத் **'திராவிடன்'** இதழாசிரியர் குழுவில் உறுப்பினராயிருந்து, அதினின்றும் மீண்டு, மயிலை நகராண்மைக் கழகப் பள்ளியில் தொடக்கப்பள்ளி ஆசிரியராக நெடுங்காலம் பணியாற்றினுர். புனித தோமையர் பள்ளியில் பள்ளியிறுதி வகுப்பும் ஆசிரியப் பயிற்சித்தேர்வுமே இவரின் கல்வித் தகுதி.

இலங்கை ஆறுமுக நாவலர் போல் தமிழுக்காகவே இறுதி வரை இல்லற வின்பத்தை நுகராத முனிவர் போல் இருந்து ஆராய்ச்சிப் பணியில் தம்மை முழுவதும் ஈடுபடுத்திக் கொண்டவர் மயிலை சீனி வேங்கடசாமியார். தம் கடுமையான உழைப்பாலும் ஊக்கத்தாலும் தம தமிழறிவைப் பரக்க விரித்துக் கொண்டு புலவர் பலரும் நுழைய அஞ்சும் பல துறைகளில் ஆராய்ச்சி மேற்கொண்டவர் இவர். மதி நுட்பம் நூலோடு உடைய இவ்வறிஞர் நேர்மையானவர்; நடுநிலை பிறழாதவர்; அஞ்சாதவர்; அடக்கமானவர்; பணிவானவர்; கண்டிப்பானவர்; சுறுசுறுப்பு மிக்கவர்; வேகமாக நடப்பவர்; விளம்பரம் சிறிதும் விரும்பாதவர்; சமண, பௌத்த துறவியர் போல் எளிமையான தோற்றமுடையவர்.

ஊர் ஊராகக் கால் கடுக்க நடந்தும், இரவு பகலாக நூற் கடலுள் மூழ்கியும் அரிய ஆராய்ச்சிகளைச் செய்தவர் மயிலை சீனி வேங்கடசாமியார். புகழ் நாடாது, பொருள் தேடாது தம்மையே தமிழுக்கு ஈகம் செய்து கொண்டவர்.

தம் இளமைக் காலத்திலேயே சவுபாக்கியம், திராவிடன் தமிழ் நாடு, குடியரசு, ஆனந்தபோதினி, ஈழகேசரி முதலிய இதழ்கை



களில் அரிய வரலாற்று ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதி அறிஞர்கள் பெரிதும் உவந்து போற்றும்படி தமிழ்த் தாய்க்குத் தொண்டு செய்த அரும்பணியாளர் இவர். நெல்லை கா. சுப்பிரமணிய னார், மு. இராகவனார் முதலியோர் இவர் எழுத்துகளையும் ஆராய்ச்சிகளையும் பெரிதும் விரும்பினர் எனில் இவர் ஆராய்ச்சிப் புலமையைப் பற்றி என்ன சொல்வது? இவரின் ஆராய்ச்சிக் கட்டுரைகள் திட்பமும், நுட்பமும் செறிந்து, எளிமையும் இனிமையும் தோய்ந்த ஆய்வுப் பெட்டகங்களாகும். பல்லவப் பேரரசர்கள் மகேந்திர வர்மன், நரசிம்ம வர்மன, மூன்றும் நந்தி வர்மன் ஆகியோரைப் பற்றி இவர் ஆராய்ந்து வெளியிட்டுள்ள நூல்கள் வரலாற்றாசிரியர் களால் பெரிதும் பாராட்டப் பெறுகின்றன. இவ்வாராய்ச்சிகளின் பொழுது, தாம் கண்ட வரலாற்று முடிவுகளை ஒப்பிட்டு நோக்க பத்துப் பதினைந்து முறை காஞ்சிபுரம் சென்றார். சென்னைப் பல்கலைக் கழக நூல் நிலையத்திலும், கன்னிமரா நூல் நிலையத்திலும், நடுவண் ஏட்டுச்சுவடி நூல் நிலையத்திலும் இவர் தம் வாணாளில் பெரும் பகுதியைக் கழித்திருக்கிறார்.

இவர் மறைமலையடிகள் நூலில் ஆழ்ந்த ஈடுபாடும் அவர்பால் பெருமதிப்பும் கொண்டவர். அவரைப் போல் தூய தமிழ் எழுதும் விருப்புற்றவர். அடிகள்பால் தொடர்பும் அவர் சொற்பொழிவு களில் நாட்டமும் உடையவர். இவர் இலங்கை விபுலானந்த அடிகள், திரு. வி. க., தெ. பொ. மீ., சோமசுந்தர பாரதியார், பேரா. சதாசிவப் பண்டாரத்தார், இரா. பி. சேது, மே. வி. வேணு

கோபாலர், கு. தண்டபாணி மு வ, அ. சிதம்பரனுர், கா. அப்பாத் துரையார், மா. இராசமாணிக்கனுர், நாரண துரைக்கண்ணனுர், மயிலை சிவமுத்து, பூ. ஆலாலசுந்தரனுர் கே. கே. பிள்ளை, கி.ஆ.பெ, இலங்கை கா. பொ. இரத்தினம், செக்கோசுலாவியா பர். கமில் சுவலபில் ஆகிய அறிஞர்களிடம் அன்பும் தொடர்பும் நட்பும் கொண்டவர். மூதன் முதல் நடந்த இந்தி யெதிர்ப்புப் போராட்டத் தில் கி. ஆ. பெ. விசுவநாதனுடன் ஒத்துழைத்தவர். பெரியார் ஈ. வெ. இரா.விடத்தில் பற்றும் மதிப்பும் உண்டு. பாரதிதாசனிடம் இவர்க்கு மிக்க ஈடுபாடு உண்டு. இவர் மேல் பாவேந்தர்க்கும் அன்பும் மதிப்பும் உண்டு. பாவேந்தரின் மாமல்லபுரப் படகுச் செலவு குறித்த பாடல் நிகழ்ச்சியில் அவரோடு படகில் சென்றவர் களில் மயிலையாரும் ஒருவர். சைன, பௌத்தத் துறவியர் பலர் தொடர்பும் இவருக்குண்டு.

இவர்க்கு ஆங்கிலம் மிகுதியாகத் தெரியும். மலையாளமும் கன்னடமும் நன்கு தெரியும். மற்றும் பிற திரவிட மொழிகளில் ஓரளவு ஈடுபாடு கொண்டவர். கல்வெட்டுகளைப் படித்தறியவும், பழைய ஏட்டுச் சுவடிகளைப் படிக்கவும், பழமுறி(சாசனங்)களை ஆராயவும், பழம் பொருட்களைக் கண்டுபிடிக்கவும் இவர்க்கு நன்கு பயிற்சி யிருந்தது. இவர் தமிழ் எழுத்தியல் வளர்ச்சியை நன்கு அறிந்திருந்தார். கோலெழுத்து, கிரந்த எழுத்து, பல்லவர் எழுத்து, பிராமி எழுத்து, நாகரி எழுத்து எனத் தமிழோடு தொடர்புடைய வரி எழுத்துகளைச் சிறக்க அறிந்திருந்தார்.

கடுமையான உழைப்பாளராகவும், சிறந்த நடுநிலை வரலாற் ருசிரியராகவும், நல்ல சொற்பொழிவாளராகவும் இருந்த இவர்க்கு 1961-இல் மணிவிழா நடந்து, 'ஆராய்ச்சி அறிஞர்' பட்டம் கொடுக்கப் பெற்றது. மதுரைப் பல்கலைக் கழகம் கடந்த 29-3-80-இல் 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' பட்டம் தந்து பாராட்டியது.

கிறித்தவமும் தமிழும், பௌத்தமும் தமிழும், சமணமும் தமிழும், தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், தெள்ளாறு எறிந்த நந்திவர்மன், மறைந்து போன தமிழ் நூல்கள், புத்தர் சாதகக் கதைகள், கொங்கு நாட்டு வரலாறு, துளுநாட்டு வரலாறு, சேரன் செங்குட்டுவன், பாண்டியர் வரலாறு, களப்பிரர் ஆட்சியில் தமிழகம், சங்க காலத் தமிழர் வாணிகம் முதலிய முப்பது அரிய நூல்களை எழுதிய இவ்வரிய வரலாற்றுப் பேறறிஞர் அவர்தம் நூல்களின் வழி என் றென்றும் நம்மிடையே புகழுடம்புடன் நிலைத்து வாழ்வர் என்பது திண்ணம். மயிலை சீனி வேங்கடசாமியவர்களின் மாண்புகழ் நீடு வாழ்க! O

கற்க, கனிச்சாறு!

—கருவூர் க. ஆ. ஒளியவன் (பிரகாசம்)

ஒவ்வோர் தமிழ்மகனும் ஒன்றிப் படித்துத்தன்
செவ்விய பண்பில் சிறக்கவே—இவ்வேளை
பாவல ரேறு பெருஞ்சித் திரனார்தம்
காவல் 'கனிச்சாறு' காண்!

பழம்பெருமை மீட்கப் பைந்தமிழைக் காக்க
முழங்குந்தன் மானம் முகிழ்க்க—வழங்கினார்
நாவலர்—பாவலர் நம்பெருஞ் சித்திரக்
காவலர் 'கனிச்சாறு' காண்!

பாரதியும் தாசனுந்தாம் பாவலர் ஏறென்னும்
ஓருருவம் என்பதனை ஓர்ந்தீரா?—நேரத்தே
காண்க கனிச்சாற்றில்! கண்டால் உளத்தெளிவு
பூண்டிடுவீர் என்பேன் புரிந்து!

சோற்றுப் பருக்கைக்கே சொல்மாறி விட்டீர்கள்!
சாற்றும் தமிழ்க்கே தவறிழைத்தீர்—மாற்றார்க்கே
குற்றேவல் செய்தீர்! குலமானம் வேண்டுமெனின்
கற்க, 'கனிச்சாறு' காண்!

பூட்கைத் தமிழ்மகனே, புல்லிருள் போயினும்
வேட்கை யிலையா விழிப்பதற்கே?—கேட்டிலையோ,
பாவலர் ஏறுதாம் பாடும் கனிச்சாறு?
ஆவலாய் இன்னே அருந்து!

அரபியரும் தமிழரும்!

உலகில் ஆறுகோடி அரபு மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு 23 தனி நாடுகள் இருக்கின்றன. உலக ஒன்றிய நாடுகள் அவையில் அரபு மக்களுக்கு 22 படிநிகராளியர் (Representatives) இருக்கின்றனர். தமிழ் மக்களும், உலகத்தில் ஆறு கோடி மக்களுக்கும் அதிகமாகவே இருக்கிறோம். ஆனால் நமக்கென்று ஒரு தனி நாடு கிடையாது. உ. ஒ. மன்றத்தில் தமிழ் மக்களின் சார்பில் பேச ஒரே யொரு படிநிகராளிதானும் கிடையாது. தமிழீழம் அமைந்தால் இக்குறை தவிர்க்கப்படும்.

ஆகவே, உலகமெங்கும் இருக்கும் தமிழர்கள் குறிப்பாகத் தமிழ் நாட்டில் வாழும் மக்கள், தங்கள் தந்நலத்திற்காகவாவது தமிழ ஈழத்திற்கு ஆதரவு தர முன்வர வேண்டும். மற்ற ஆதரவு இல்லா விட்டாலும் கருத்து மொழி ஆதரவையாவது ஒருமனதாக வழங்க உடனடியாக முன்வர வேண்டும்.

—திரு. கிருட்டிண வைகுந்தவாசன்,
(17-2-80 கோவைக் கூட்டத்தில்)
—நன்றி. சுதந்திரன் 6-4-80.



நூறாசிரியம்

பெருஞ்சித்திரன்

பாட்டு: ௫௧

தும்பை சூடிலர்; இடைவாள் செருகிலர்;
வெண்கலை உடுத்திலர்; கொல்வேல் ஏந்திலர்;
தடமுர சார்த்திலர்; இடம்பொழு தமைத்திலர்!
வடம்பிணிப் பறுத்த மதக்களி றன்ன
தடம்பட நடந்த கால்கழல் பூண்டிலர்!

வேத்தவை நுழைந்திலர்; யாத்தநூல் அறிகிலர்!
பூத்த இளமுகத் தொளியுமிழ் கண்ணும்
முத்த வெய்துளி நுதலுஞ் சிவப்பக்
கொள்கை பொறித்த கொடிதோள் தாங்கி
வெல்கை யொன்றே வேண்டுவோராகி
வானம் அதிரச் சூழ்ந்துகோள் ஆர்த்து
மானங் காத்திட எழுந்தனர் இவரே!

புன்றலை முதிரா யாக்கையி னேரே!
முகமயிர் அரும்பா இளவயி னேரே!
பால்முகம் மாறுப் பசுமையோ ராகி
நூல்முகம் புகூஉம் பள்ளி யோரே!

செம்புது வெள்ளம் ஒப்போ ராகித்
தம்புதுக் கொள்கை தெருத்தொறும் முழக்கி
வைகறை தொடங்கிக் கதிரொடு நடந்தே
யாமமுந் துயிலாத் தறுக ணேரே!
மண்ணும் வேண்டிச் சூழ்ந்தனர் இலையே!
பொன்னும் விழைந்தனர் இலையே! பொருதும்
நோக்கும் அரும்பிலர்; நுண்கலை பயின்றிலர்;
கருவியுங் கொண்டிலர்; போர்முகம் கண்டிலர்;
சுவடியும் கோலுந் தூக்குவ தன்றிக்
கவடும் படையும் தாமறி கல்லார்!

படையும் மலைந்திலர்; நடையுந் தளர்ந்திலர்!
இடையிடை நெகிழ்தலும் இறுதலும் இல்லார்!
விறலே அவர்தம் கோளே! விறற்கு
மறலே அவர்தாம் தூக்கிய படையே!
ஊண் தவிர் நோன்பொடும் உயிர்தீர் முயல்வொடும்
காண்குநர் கண்ணீர் கலுழக் காலமும்
நன்றுந் தீதும் நினையா ராகி
ஒன்றும் நெஞ்சொடு சென்றனர் உவந்தே!

தொல்லோர் மரபின் அரசரும் அல்லர்;
வல்லோர் வழியின் துறவோர் அல்லர்;
பொருளும் இன்பும் அறத்தொடு நடந்தே
இருள்தீர் வாழ்வும் விழையா ராகி
அற்றைத் தமிழ்த்தாய்க் கிற்றை மகரென
ஒற்றைத் தனிநீள் நினைவொடு சென்றார்!

மூவா இளமை முதுமொழிக் கேய்ந்த
தாவாப் பெருந்துயர் தகர்ப்பா ராகி
நெய்யெரி புகுத்திய புகழோர் சிலரே!
மெய்யழி பட்ட மேலோர் சிலரே!
கடுஞ்சிறை தாங்கிய வல்லோர் சிலரே!
கொடுங்குறை யுறுப்பொடு நைந்தோர் சிலரே!
யாங்கன் உரைப்பலக் கொடுங் கோல் வினையே!

பூங்கண் மதிமுகப் புன்னகைச் செவ்வாய்
செந்தமிழ் வாழ்கெனச் செப்பிய உரைக்கே
ஈர்ந்தண் உலகமும் இருணீள் விசும்பும்
தாமுங் கொடுப்பினும் தகுநிறை வன்றே!
ஒன்றும் ஈயான் ஆகினும் ஒழிக;
கொன்றும் அடங்கிலாச் சாப்பசி கொண்டு
படையற நின்ற நடையி னோரை
விளையா நின்ற இளையோர் தம்மை
மலர்முகை சிதைத்துத் தழலிடற் போல
உலர்தீ நெஞ்சினன் உயிர்வாங் கினனே!

ஆடல் இளமகள் நல்லுயிர் அயின்ற
கேடுறு நன்னனும் இவன்வினை நாணும்!
மொழிக்கென வெழுந்தார் இவர்பிற ரிலரே!
பழிக்கென நின்றோன் இவன்பிற னிலனே!
மயர்தீர் கொள்கைச் சான்றோர் அழுங்க
உயர்செந் தமிழ்க்கே உறநின் றோரை
வெய்வேட் டெஃகம் விதிர்ப்பறத் தாங்கிக்
கொய்துயிர் துணித்தது கொலையோன் கோலே!

புன்றலைச் சிறாஅர் செந்நீர் ஆடியோன்
முந்நிற நெடுங்கொடி முன்றிலும் சிதைக!
அன்னோன் தாங்கிய அரசுஞ் சிதைக!
முற்றா இளவுயிர் தமிழ்க்கெனப் போக்கி
வற்றா நெடும்புகழ் வழிவழிக் கொண்ட
இளையோர் காத்த எந்தமிழ்
கிளையுறப் பொலிக குலைவிலா தினியே!

பொழிப்புரை: *(1-12)* போர் செய்யப் புறப்பட்டதற்கு அடையாளமான தும்பைப் பூவை இவர்கள் சூடியிலர்; இடையிலே கைவாள்களையும் செருகியிலர்; போர் செய்யப் போவோர் உடுத்தும் வெள்ளை உடைகளையும் உடுத்தியிலர்; கொல்கின்ற வேல்களையும்

ஏந்திலர்; பெரிய முரசங்களை ஆர்த்திலர்; போர் தொடங்குவதற் குரிய இடத்தையும் பொழுதையும் இவர்கள் அமைத்துக் கொண்டார் களில்லர். கயிற்று வடங்களைப் பிணித்த பிணிப்புகளை அறுத்துக் கொண்டு, இடங்கள் நலியுமாறு நடக்கின்ற மதங்கொண்ட களிறு களைப்போல் இவர்கள் தம் கால்களில் வெற்றிக் கழல்களைப் பூண்டா ரல்லர். இவர்கள் வேந்தரின் அவைக்குள் நுழைந்தும் இலாதவர்; போர் நுணுக்கங்களைக் கூறுவதற்கென யாக்கப்பெற்ற நூல்களை யும் இவர்கள் அறிந்தவரல்லர்; பூத்த மலர் போலும் இளமை முகங் களில் ஒளி சிந்துகின்ற கண்களும், முத்துப் போலும் அரும்பி யிருக்கும் வெயர்வைத் துளிகள் சேர்ந்த நெற்றியும் சிவக்க, கொள்கை முழக்கங்களைப் பொறித்த கொடிகளைத் தோள்களில் தாங்கி வெற்றி யொன்றையே விரும்புவோராகி, வானம் அதிரும்படி, அனைவரும் சூழ்ந்து நின்று, கொள்கைகளை முழக்கித் தமிழ்த்தாயின் மானம் காக்கும்படி எழுந்து விட்டனர் இவர் காண்!

(13-16) இளமைத்தலை முதிராத உடம்பையுடையவர்கள் இவர்கள். முகத்தில் குறுமயிர் அரும்பம் கொள்ளாத இளமையினோர் இவர்கள். பால் நாறும் முகம் மாருத பச்சை இளந்தையராகி, நூல் களில் முகம் பதிப்பதன் பொருட்டுப் பள்ளிக்கண் விடப்பட்டவர்கள் ஆவர் இவர்கள்.

(17-26) செந்நிறந் தாங்கிய புதுமழை வெள்ளத்தைப் போலும் பொங்கி யெழுந்தவராகித், தமிழ்மொழியின் மேல் தாம் வைத்த பற்றுகிய புதுமைக் கொள்கையினைத் தெருக்கள் தோறும் முழக்கி, வைகறை தொடங்கிக் கதிரவனெடு ஏற நடந்து, இரவின் நடு யாமத்திலும் துயில் கொள்ளாத வீரவுணர்வு கொண்டவர்கள் இவர்கள். மாற்ருர் நிலத்தைத் தாம் கொள்ள வேண்டி இவர்கள் ஒன்று திரண்டவர்கள் அல்லர்; பொன்னையும் விரும்பினர் இல்லை; ஏதற்காகத் தாம் போராட வேண்டும் என்ற நோக்கமும் அரும்பாத அகவையினர்; நுண்ணிய போர்க்கலைகளைப் பயின்றில்லாதவர்கள்; கருவிகளையும் தம் வயின் கொண்டு வாராதவர்கள்; போர்முகம் கண்டி ராதவர்கள்; கற்கவும் எழுதவும் உள்ள சுவடிகளையும், தூவல் முதலிய எழுதுகோல்களையும் தாம் தூக்கி வரும் பழக்கத்தினரன்றிப் போர்ச் சூழ்ச்சிகளையும், கருவிகளையும் அறிந்திலாதவர்கள்.

(27-34) இவர்களைத் தடுத்து நிறுத்தும் காவலர் படையைக் கண்டும் இவர்கள் மலைப்புற்றுரிலர்; முன்னேறி நடக்கும் நடையும் தளராதவர்கள்; இடையிடையில் தாம் ஒன்றிய போக்கில் நெகிழ்ச்சி யும் முறிவும் இல்லாதவர்கள்! வெற்றிதான் அவர்களின் குறிக் கோள்! அவ் வெற்றி பெற வேண்டியதற்கான வீரவுணர்வே அவர்கள் தூக்கியிருக்கும் படைக் கருவி. உணவைத் தவிர்க்கின்ற நோன்பு உணர்வொடும், உயிர் கழலினும் ஊழ்க்காத முயற்சி

யொடும், பார்ப்பவர்களுக்குக் கண்களில் நீர் கசியும்படி, பகல், இரவு என்னும் பொழுதுகளையும் நல்லது, தீது என்னும் நிலைகளையும் நினையாதவர்களாகிக், குறிக்கோளில் பொருந்திய நெஞ்சத்தோடு மகிழ்வுடன் சென்றனர்.

(35-40) தொன்மைக் காலத்தினின்று வழி வழியாக வரும் அரச மரபினர் அல்லர் இவர்கள்; வலிமைமிகு சான்றோர் வழியாக வந்த துறவியரும் அல்லர் இவர்கள். பொருளீட்டமும், இன்ப நாட்டமும் அறம் பிழையாதவாறு நடக்கின்ற இருள் தவிர்ந்த வாழ்க்கையினையும் விரும்பாதவராகி, அன்றைய தமிழ்த்தாய்க்கு இன்று பிறந்த மக்களென, ஒன்றேயாகிய, தனித்த, நீண்ட நினைவொடு இவர்கள் சென்று கொண்டிருந்தனர்.

(41-47) மூவாததும், இளமை கொண்டதும், முதிர்ந்ததும் ஆகிய தமிழ்மொழிக்கு வந்து நேர்ந்து அழிவுறும்படி வருத்துகின்ற பெருந் துயரத்தைத் தகர்த்தெரிவதன்பொருட்டுத்தொடங்கியபோரில் தம்மை நெய்யூட்டிய எரிக்குள் புகுத்துக் கொண்டழிந்த புகழுடையோர் சிலர் உளர்; உடலழிவுற்ற மேன்மையோர் சிலர் உளர்; கடுமையான சிறைக்குள் அடைக்கப் பெற்ற துன்பத்தைத் தாங்கிக் கொண்ட வலிமையினர் சிலர் உளர். கொடுமையாகக் குறைக்கப் பெற்ற எச்ச உறுப்புகளுடன் துன்புற்று வருந்தியவர்கள் சிலர் உளர். எவ்வாறு உரைப்போம் அக் கொடுமை சான்ற அரசின் செயல்களை?

(48-57) பூப்போலும் கண்ணும், மதிபோலும் முகமும், புன்னகை செய்கின்ற சிவந்த வாயும் கொண்ட அவ் விளைஞர்கள் ‘செந்தமிழ் வாழ்க’ எனக் கொள்கிய முழங்கிய உரத்துரைக்கு, ஈரமும் குளிர்ச்சியும் உடைய இவ்வுலகமும், இருள் நீண்ட விசும்பும் ஆகிய இரண்டையும் அன்பளியாகக் கொடுப்பினும் அவை தகுந்த நிறைவாக இரா. ஆயினும், ஒரு பொருளும் ஈயாதவனாகினும் ஒழிக. மாந்த உயிர்களைக் கொன்றும் அடங்கிடாமல் சாவையே பசியாகக் கொண்டு, கருவிகளில்லாமல் வெறுங்கையராக நின்ற, இப் போராட்ட நடையினோரை—முழுவதும் விளையாமல் நின்ற இளைய பருவத்தினர் தம்மை, மலர் மொட்டுகளைச் சிதைத்து நெருப்பிலிடுதல் போல் உலர்ந்த பொருளில் பற்றுகின்ற தீயைப் போன்ற கொடுமையுற்ற நெஞ்சையுடையவன் உயிர்களை வாங்கினான்.

(58-65) நீராடிய அன்னிமிஞிலியின் நறுவிய உயிரைத் தின்ற கேடு சான்ற நன்னன் என்னும் அரசனும், இவ்வினைக்கு நாணுவான்! தமிழ்மொழி காப்பதற்கென்றே எழுந்தவர்கள் இவர்களைத் தவிர வேறு இலர்; அதுபோல் பழிக்கெனவே நின்றவனும் இவனைத் தவிர, (தமிழ் வரலாற்றில்) வேறு எவனும் இலன். மயக்கம் தீர்கின்ற கொள்கையையுடைய சான்றோர் வருந்தும்படி, உயர்ந்த

மொழியாகிய செந்தமிழுக்குத் துணையாகி நின்றவரை, கொடிய வேட்டெஃகத்னை நடுக்கமுறாது தாங்கி உயிர் கொய்து உடலைத் துண்டு செய்தது கொலையவனின் கொடுங்கோல்!

(66-72) இளந்தலைமை உடைய சிறுவர்களின் குருதியில் குளித்தவனின் மூன்று நிற (ப்பேராயக் கட்சி)க் கொடியும் அரண் மனை மூன்றிலும் சிதைந்தொழிக! அன்னவன் தாங்கிய அரசும் சிதைந்தொழிக! முற்றாத இளவுயிர்களைத் தமிழ்மொழிக்கெனவே போக்கிய வழி, வற்றாத நெடிய புகழை வழி வழியாகக் கொண்ட இளைஞர்கள் காத்த எம் தமிழ்மொழி பல கிளைகளும் மல்கிக் குலைவுகள் இலாது இனிப் பொலிந்து விளங்குக!

விரிப்பு: இப் பாடல் புறத்துறையைச் சார்ந்தது. உலக வரலாற்றிலேயே மொழிக்கென வெழுந்த முதற்புரட்சியும், தமிழக மறுமலர்ச்சி வரலாற்றின் திருப்பமும் ஆகிய 1965-ஆம் ஆண்டு இந்திப் போராட்டத்திற் கலந்து செந்நீர் சிந்தி, விழுப்புண் ஏற்ற தமிழ் மறவர்கட்குப் பாடியது இப் பாடல். (தொடரும்)

வெளிவந்து விட்டது! விற்பனைக்குக்கிடைக்கிறது.

பெருஞ்சித்திரனார் பாடல்கள் - கனிச்சாறு

அரிய பாடற்களஞ்சியம்

தொடக்கக் காலத்திலிருந்து 1978-ஆம் ஆண்டு வரை எழுதப் பெற்றுத் தென்மொழி, தென்றல், முல்லை, பகுத்தறிவு, தமிழ்நாடு, வானம்பாடி, செந்தமிழ்ச் செல்வி, விடுதலை, தமிழ்ப்பொழில் முதலிய இதழ்களில் வெளிவந்தனவும், வராதனவுமாகிய பன்னூற்றுக் கணக்கான தலைப்புகளில் ஏறத்தாழ 18000 வரிகள் கொண்ட ஆயிரக் கணக்கான பாடல்கள் ஒருசேரத் தொகுக்கப் பெற்று வந்த மூன்று தொகுதிகள்.

தீங்கனிச்சாறு! செந்தமிழ்த் தேனூறு!

என்றென்றும் வைத்துப் போற்றவேண்டிய
இலக்கியப் பாச்சுரங்கம்!

முதல் தொகுதி	**உரு.**	**15—00**
2-ஆம் தொகுதி	,,	**11—00**
3-ஆம் தொகுதி	,,	**17—50**

பதிவஞ்சற் செலவுடன் மூன்று நூல்களையும் நூலஞ்சலில்
விடுக்க: உரு. 47—50

10 படிகள் வாங்குபவர்களுக்குக் கழிவு 10 விழுக்காடு

தென்மொழி, சென்னை-5

செய்திகள்

1- திருப்புக்கொளியூர் (அவநாசி) தேர்த் திருவிழா :

கோவை மாவட்டம் திருப்புக்கொளியூர் (அவநாசி)யில், கடந்த 20-4-80 முதல், 7-5-80 முடிய பதினெட்டு நாட்களும், அருள்மிகு பெருங்கருணை அம்மன் உடனமர் அவநாசியப்பர் தேர்த் திருவிழாவும், அதைத் தொடர்ந்து சொற்பொழிவுகளும், இன்னிசை, பட்டிமன்ற நிகழ்ச்சிகளும் திருக்கோயில் திருமண்டபத்தில் நடைபெற்றன. அவற்றுள் கடந்த 28-4-80-ஆம் பக்கல் நிகழ்ச்சியாக, **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் **'திருக்குறள் அறம்'** என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினார். நிகழ்ச்சிக்குச் சித்தோடு பாவலர் திரு. **குமர நடவரச ஈவப்பனார்** தலைமை தாங்கினார். நிகழ்ச்சி அவிநாசி, திரு. வி. க, மன்றத்தினரால் ஏற்பாடு செய்யப் பெற்றது.

2. தமிழ் முரசு ஆசிரியர் மெ. சிதம்பரம் சிங்கை திரும்புதல் :

அண்மையில் தமிழகம் வந்திருந்த சிங்கப்பூர், தமிழ் முரசு ஆசிரியரும் தனித்தமிழ் அறிஞருமாகிய திரு. **மெ. சிதம்பரனார்**, கடந்த 2-5-80-இல் தம் சொந்த ஊரான, காரைக்குடி, கல்லுப்பட்டியிலிருந்து சென்னை வந்தார். 3-5-80-இல் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்களால், தென்மொழி இல்லத்தில் திரு. **சிதம்பரனார்** அவர்களுக்கு ஒரு வழியனுப்பு விருந்து கொடுக்கப் பெற்றது. ஆசிரியரவர்கள் அன்று பிற்பகல் வரை தென்மொழியாசிரியருடன் தங்கியிருந்து தமிழ் வளர்ச்சி குறித்துப் பற்பல கருத்துகளைப் பரிமாறிக் கொண்டார். இறுதியில் விடைபெற்றுப் போகு முன் திரு. மெ. சிதம்பரனாரவர்கள் தென்மொழி வளர்ச்சிக்கென, பொறுப்பாசிரியரவர்களிடம் உரு. 100 நன்கொடையளித்தார்கள். அதன்பின் 5-5-80 அன்று வானூர்தி வழியாகச் சிங்கை சென்றார்கள்.

3. தமிழ் முன்னேற்றக் கழக நிகழ்ச்சி, சென்னை-2 :

கடந்த 9-5-80 வெள்ளி மாலை, சிங்கையிலிருந்து வருகை தந்திருந்த, சிங்கை, தேசியத் தொழிற் கழகப் பேரவைச் செயலரும், சிங்கை துறைமுகத் தொழிலாளர் ஒன்றியச் செயலாளரும், பயிற்றுவிப்பாளரும் ஆகிய திருவாளர். **உ. துரைசாமி** அவர்களுக்கு, சென்னை-5, முசுலிம் மேல் நிலைப் பள்ளியில், சென்னை தமிழ் முன்

னேற்றக் கழகச் சார்பில் தேநீர் விருந்தும் வழியனுப்பு விழாவும் நடைபெற்றது. விழாவிற்கு, 'கவிக்கொண்டல்' இதழாசிரியர் பாவலர் திரு. **மா. செங்குட்டுவனார்** தலைமை தாங்கினார். முன்னாள் நகரப் பேரவைத் தலைவர் **சா. கணேசனார்** திரு. துரைசாமி அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தினார். பாவலர்கோ **வா. மு. சேதுராமன் (ஆசிரியர், தமிழ்ப்பணி)** வரவேற்புரையாற்றினார். துரைசாமி அவர்களைப் பாராட்டிப் பொதுவுடைமைப் பாவலர் **கே. சி. எசு. அருணாசலம், 'மருமம்'** இதழாசிரியர் **அரு. கோபாலன், நாவேந்தன்** ஆகியோர் உரை நிகழ்த்தினர். இறுதியில் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் பாராட்டுரை வழங்கினார். பாவலர் திரு. பொன். அய்யனாரப்பன் நன்றியுரையுடன் நிகழ்ச்சி இனிது நிறைவுற்றது.

பிற செய்திகள்

1. தைப்பிங் முத்துப்பாண்டியன் - மகேசுவரி அவர்களின் தவச்செல்வி தமிழரசி பெயரிடு விழா :

கடந்த 27-4-80 காலை 11 மணியளவில் மலேசியா, கோலாலம்பூர், சுங்கை பீசியில், தைப்பிங் நெடுநாளைய தென்மொழியன்பர் பாவலர் **முத்துப்பாண்டியன்—மகேசுவரி** அவர்களின் முதல் பெண் குழந்தைக்குத் **தமிழரசி** என்னும் பெயரிடு விழாவும் விருந்து நிகழ்ச்சியும் நடைபெற்றன. நிகழ்ச்சிக்குத் தமிழ்த்திரு **இரா. பெருமாள்** (ஈப்போ) தலைமை தாங்கினார். தவத்திரு. **சுவாமி இராமதாசர்** (பினாங்கு) குழந்தைக்குப் பெயர் சூட்டி வாழ்த்தினார். அவரையடுத்து, ஈப்போ பாவாணர் தமிழ் மன்ற நிறுவனரும், காப்பாளரும் ஆகிய செந்தமிழ்க்குரிசில் **சா. சி. சுப்பையா** அவர்களும், திருவாளர்கள் **கா. கலியபெருமாள், ஆ. கி. டேவிடு, இரா. பாண்டியன், முரு. சொ. நாச்சியப்பன்** ஆகியோரும் வாழ்த்துரை வழங்கினர். பெயர் சூட்டு விழா நிகழ்ச்சி நினைவாகத் **தென்மொழி** வளர்ச்சிக்கு உருபா 101-ஐப் பாவலர் **முத்துப்பாண்டியன்—மகேசுவரி** அவர்கள் அன்பளிப்புச் செய்ததை நன்றியுடன் வரப்பெற்றோம். குழந்தை தமிழரசி, பெருநலமும் பெருகு வளமும் பெற்றுப் பல்லாண்டு வாழ்ந்து பெற்றோர்க்குப் பெருமை சேர்க்க நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகிறோம்.

2. 'தமிழில் பெயரிடுவோம்'—நூல் வெளியீட்டு விழா :

தனித்தமிழ்த் தொண்டரும் எழுத்தாளரும், மலேசிய திராவிடர் ழகம், கூலிம் கிளையின் தலைவரும், கூலிம் அஞ்சலகத் தலைவரும்

ஆகிய திரு. **நாரண-திரவிடச் செல்வன்** அவர்கள் எழுதிய **'தமிழில் பெயரிடுவோம்'** என்னும் நூலின் வெளியீட்டு விழா கடந்த 6-4-80 அன்று கடாரம் – கூலிம் நகரில், பினுங்கு வள்ளல் **ரெனு** அவர்களின் தலைமையில் நடைபெற்றது. திருவாட்டி **தாமரைச்செல்வி சுப்பிரமணியம்** தமிழ் வாழ்த்துப் பாட, திரு. **இரா. இராசு** அனைவரையும் வரவேற்றார். பொதுப்பணி, பயனீட்டுத்துறை அமைச்சர் மாண்புமிகு. **ச. சாமிவேலு** முதல் நூலை வெளியிட்டு உரையாற்றினார். திரு **மா. செ. மாயதேவன்** திரு. **க. பாலசுப்பிரமணியம்** ஆகியோர் வாழ்த்துரை வழங்க, திரு. **கா. கலியபெருமாள்** நூல் ஆய்வுரை ஆற்றினார். திரு. இரா. ப. தங்கமணி அறிவிப்பாளராக விருந்தார். இறுதியாக திரு. இரா. ர. பச்சையப்பன் நன்றி நவில விழா இனிது நிறைவுற்றது.

காலங் காலமாகத் தமிழ் மக்களை ஆண்டு வரும் புராண, இதிகாச, வடமொழிப் பெயர்ச் சொற்களை ஒழித்து விட்டுத் தூய தமிழ்ப் பெயர்களை வழக்கிற்குக் கொண்டு வர வேண்டும் என்னும் குறிக்கோளுடன் ஏறக்குறைய 900 தூய தமிழ்ப் பெயர்களுடன் கட்டுரை நூலாக, **'தமிழில் பெயரிடுவோம்'** என்னும் நூல் வெளி வந்துள்ளது. **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் வழங்கிய அரிய மதிப்புரையும், மலாயா பல்கலைக் கழக விரிவுரையாளர் பர். **இரா. தண்டாயுதம்** அவர்களின் அணிந்துரையும், திருவாட்டி **தாமரை சுப்பிரமணியம்** அவர்களின் ஆங்கில முன்னுரையும் நூலுக்குப் பெருமை சேர்க்கின்றன.

---

o 'விக்ரகம்' என்னும் சொல் வடசொல். அதற்குரிய தமிழ்ச் சொல்லே இல்லை. இது கொண்டே தமிழர்க்கு விக்ரக வணக்கம் இல்லை என்று கூறலாம். இவ்வணக்கம் ஆரியப் பார்ப்பனரால் தமிழகத்தில் நுழைக்கப்பட்டது. பார்ப்பன (இந்து) மதம் தமிழ்நாட்டிற் பரவியுள்ளது என்பதை அறிய அம்மதத் தொடர்பான சொற்கள் சமசுக்கிருதச் சொற்களாக இருத்தலே தக்க சான்றாகும். புராண காலத்தில் இக்கொள்கைகள் தமிழ் நாட்டிற் புகுந்தன. விக்ரகம் என்னும் சொல்லும் பொருளுமே பண்டைத் தமிழர் பழக்கங்கட்கும் எண்ணங்கட்கும் புதியவை.

—Caldwells comparitive Grammar, Inf. P. 47.Ed. 3.

அன்பர்கள் கவனிக்க

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள், **காரி, ஞாயிறு** ஆகிய நாள்களில் மாலை 5-மணிக்குமேல் வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள். வெளியூர் அன்பர்கள் முன்கூட்டியே எழுதி விடை பெற்றுக் கொண்டு வர வேண்டும்.

—**அமைச்சர்.**

நூற்சுருக்கம் :

(**'நூற்சுருக்கம்'** என்னும் இப் பகுதியில் அரிய சில நூல்களின் சுருக்கம் தொடர்ந்து வெளியிடப் பெறும். இவ்விதழில் 1942-ஆம் ஆண்டு 'நாம்-தமிழர்' இயக்கத்தின் தலைவராக விருந்த திரு. **சி. பா. ஆதித்தனர்** அவர்களால் எழுதி வெளியிடப் பெற்ற **'தமிழப் பேரரசு'** என்னும் நூலின் சுருக்கம் தொடங்குகிறது. தூய தமிழ்ப் படுத்தம் தவிர நூலில் மாற்றம் எதுவும் செய்யவில்லை. தென்மொழி அன்பர்கள் இப் பகுதியில் வெளியிடப்பெறும் நூல்களின் சுருக்கங்களைத் தவருமல் படித்துப் பயன்பெறுவார்களாக. —ஆசிரியர்.)

தமிழப் பேரரசு!

—**சி. பா. ஆதித்தனர்.**

1. பெருமை கொள்வாய்

தமிழ் நாட்டின் மீது, இளந்தமிழர்களுக்குப் பற்று உண்டாவதைத் தடுக்கவேண்டும் என்கிற நோக்கத்துடன் எழுதப்பட்ட பொத்தகங்கள் பல வெளியாகி உள்ளன. தொடக்கப் பள்ளிகளில் படிக்கிற, 8, 9, 10 அகவைத் தமிழ் மாணவர்களுக்கு, அரசு ஏற்படுத்தியுள்ள பாடப் பொத்தகங்களும் அதே நோக்கத்துடன் எழுதப் பட்டுள்ளன. அந்தப் பொத்தகங்களைப் படிக்கிற மாணவர்களுக்குத் "தமிழன்" என்ற உணர்ச்சி உண்டாகாமல் இருக்கக்கூடிய வகையில் அவை உள்ளன.

நமது நாடு

தமிழ்நாடு முழுவதிலும் தொடக்கப் பள்ளிகளில் கற்றுக் கொடுப்பதற்காக, "பூகோள சாத்திரம்", ஒன்று எழுதப்பட்டு இருக்கிறது. அதில் தமிழ்நாட்டைப் பற்றி ஏதாவது சொல்லப்பட்டு இருக்கிறதா? இல்லை! என்ன எழுதியிருக்கிறது, பாருங்கள்—

"நாம் வசிக்கும் தேசத்துக்கு இந்தியா என்று பெயர். இதன் தென் பாகமாகிய தென்னிந்தியாவில் உள்ள சென்னை மாகாணத்தில் நாம் வசிக்கிறோம்..."

இதிலே, "தமிழ்நாடு" என்ற சொல் கூடக் காணப்படவில்லை! நாம் வாழுகிற நாடு, தமிழ்நாடு என்று சொல்லிக் கொடுத்தால் என்ன? தமிழ்நாடு என்று சொன்னுல் தமிழ்ப் பிள்ளைகளின் பிஞ்சு மனங்களில் தமிழ்நாடு என்கிற பற்று பதிந்துவிடும் என்ற அச்சமா?

பண்டைய சிறப்பு

அதே காரணத்துக்காகத்தான் தமிழகத்தின் வரலாறும் தமிழ் மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுவது இல்லை. தமிழகத்தை ஆண்ட

பண்டைய மன்னர்களின் சிறப்பையும், வீரத்தையும் தெரிந்து கொண்ட தமிழ் இளைஞர்களின் உள்ளத்திலே, மீண்டும் தமிழகம் சிறப்புற்று விளங்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றும். இவ்வாறு தோன்றுமல் தடுப்பதற்காகவே, அந்த வரலாறு, தமிழ் இளைஞர்களின் கண்ணில் படாமல் மறைக்கப்படுகிறது!

தமிழக வரலாறு

தமிழ்நாட்டின் வரலாற்றில், 600 ஆண்டு என்பது ஒரு "கால வட்டம்". அதாவது 600 ஆண்டு வாழ்வும், அதன்பின் 600 ஆண்டு தாழ்வுமாக மாறிமாறி வந்து கொண்டு இருக்கின்றன.

60 ஆண்டுத் தொடரை ஓர் "ஆண்டு வட்டம்" என்பதுபோல், 10 "ஆண்டு வட்டங்களை" (அதாவது 600 ஆண்டுகள்) கொண்டது தமிழ்நாட்டின் "காலவட்டம்".

பொற்காலம்

கி. மு, நான்காம் நூற்றுண்டில் இருந்து, கி. பி. 2-ஆவது நூற்றுண்டு வரை 600 ஆண்டுகள் பிறநாட்டவர்களைத் தோற்கடித்து, அக்காலத்தில் மாந்தர்கள் வாழ்ந்த வையம் முழுவதையும் தமிழர்கள் ஆண்டார்கள். அந்தப் பொற்காலத்தில் குறிப்பிடத்தக்க மன்னர்கள் :

1. பொற்கைப் பாண்டியன்.
2. வடநாட்டு அரசர்களைத் தோற்கடித்த நெடுஞ்செழியன்,[1]
3. இமயத்தின் உச்சியில் புலி பொறித்த கரிகால் வளவன்.
4. இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன்.
5. கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்.
6. தென் தமிழரைத் தீதுரைத்த வட ஆரியரை வணக்குவித்த செங்குட்டுவன்![2]

---

1 "வடவாரியர் படை கடந்து
தென்தமிழ்நாடு ஒருங்கு காணப்
புரைதீர் கற்பின் தேவி தன்னுடன்
அரசு கட்டிலில் துஞ்சிய பாண்டியன் நெடுஞ்செழியன்"
(சிலம்பு. 23; 14—8)

2 ஆரிய மன்னர் ஈரைஞ் ஞூற்றுவர்க்கு
ஒருநீ யாகிய செருவெங் கோலம்
கண்விழித்துக் கண்டது கடுங்கண் கூற்றம்
(சிலம்பு, 25; 190—4)

அடிமைக் கால வட்டம்

கி. **பி, 2-ஆவது நூற்றாண்டு வரை இவ்வாறு சிறப்பாக** வாழ்ந்த தமிழர்களை, அதன் பிறகு, வடநாட்டு அரசர்கள் தோற்கடித்தார்கள். வடநாட்டு ஆரிய அரசர்கள் தமிழகத்தைக் கைப்பற்றி, வடமொழியை வளர்க்கலாயினர். **கி. பி. 8-ஆவது நூற்றாண்டு வரை 600** ஆண்டுகள் தமிழகம் தாழ்வுற்றது. விற்புலி மீனக்கொடி மறைந்தது. வடமொழி வளர்ந்தது. தமிழகத்தை ஆண்ட வடநாட்டு மன்னர்களில் முகாமையானவர்கள்;

1. விசய கந்த வர்மன்.

2. சிம்ம விட்ணு—பூவுலகில் சிங்கம் போன்ற சிம்ம விட்ணு, சேர சோழ பண்டியரை அடக்கி ஆண்டான் என்று வடமொழிச் செப்பேடுகள் கூறுகின்றன. "அவனி சுந்தரி கதை", "மத்த விலாச பிரகசனம்" முதலிய வடமொழி நூல்களும், மாபலிபுரச் சிற்பங்களும் சிம்ம விட்ணுவைப் பாராட்டுகின்றன.

3. மகேந்திர வர்மன்—"மத்த விலாச பிரகசனம்" என்ற வடமொழி நாடகத்தை இயற்றியவர்.

இந்த மன்னர்களைத் தவிர, முதலாம் நரசிம்ம வர்மன், பரமேசுவர வர்மன், 2-ஆம் நரசிம்ம வர்மன் ஆகியோரின் ஆட்சியும் குறிப்பிடத்தக்கவை.

இரண்டாம் பொற்காலம்

மேற்கண்டவாறு, 600 ஆண்டுகள் வடநாட்டு அரசர்களுக்கும், வடமொழிக்கும் அடிமையாகக் கிடந்த தமிழினம், மீண்டும் கி. பி. 9-**ஆம் நூற்றாண்டில் தலை தூக்கியது**.

அதிலிருந்து 600 ஆண்டுக் காலம் (அதாவது 14-ஆம் நூற்றாண்டு வரை) தமிழ் மன்னர்களின் கொடி மீண்டும் பறந்தது. தமிழ்நாட்டை ஆண்ட அயலின அரசர்கள் விரட்டியடிக்கப் பட்டதும் அல்லாமல், பிறநாட்டவர்களும் தமிழர்களுக்கு அடிமை ஆயினர். அந்தக் காலவட்டத்தில் கீழ்க்காணும் அரசர்கள் தமிழகத்தின் சிறப்புக்குக் காரணமாக இருந்தார்கள் :

1, பராந்தகன் (சோழன்)—தமிழகத்தை ஒரு குடைக்கீழ் ஆண்டவன்; ஈழத்தை வென்றவன்.

2. அருண்மொழித்தேவர் என்ற இராசராசன்—மும்முடிச் சோழன் என்ற பெயர் பூண்டவன்; "**பழந்தீவு பன்னீராயிரமும் கொண்டான்**" என்று பாராட்டுப் பெற்றவன்.

3. இராசேந்திரன்—தற்போது தில்லி நகரம் இருக்கிற "கங்கை நாடு", கடாரம் (மலாயா), ஆந்திரம், வங்காளம், பீகார்,

நக்காவரம் (நிகோபர்), சிரீவிசயம் (சுமத்திரா) ஆகிய நாடுகளை வென்றவன். கங்கை ஆற்றங்கரையிலிருந்து நாடுகளை ஆண்ட தம்மபாலன், இரணசூரன், கோவிந்தசந்தன், மகிபாலன் முதலிய வடநாட்டு அரசர்களை இராசேந்திர சோழன் தோற்கடித்ததாகவும், **தோல்வியுற்ற அரசர்கள், தங்கள் தலையில் கங்கை நீர் சுமந்து சோழ மன்னனிடம் சேர்ப்பித்தார்கள் என்றும் கல்வெட்டுகள் கூறுகின்றன.** இவ்வாறு தமிழர் நாகரிகம், வங்காளத்திலும், பிறநாடுகளிலும், கடல் கடந்த இடங்களிலும் பரவி இருந்தது.

4. குலோத்துங்கன்.

5. மாறவர்மன் குலசேகர பாண்டியன் — **"மார்க்கோ போலோ"** என்ற இத்தாலிய நாட்டுக்காரரால் புகழப் பெற்றவன்; இலங்கையை வென்றவன்; **தமிழ்நாடு முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆண்டவன்.**

தமிழ் அரசர்களின் சிறப்பு குலசேகர பாண்டியனுடன் முடிந்து விட்டது என்று சொல்லலாம். அவருடன் 600-ஆண்டுப் "பொற் காலம்" முடிவுற்றது.

2. அந்தோ தமிழ்நாடே!

உலகம் போற்றும் வகையில் 600 ஆண்டுக் காலம் தமிழர்கள் சிறப்பாக வாழ்ந்த பின், கி. பி. 14-ம் நூற்றுண்டில் "கறுப்புக் கால வட்டம்" தொடங்கியது.

தில்லியார் கொள்ளை

தில்லியிலே அரசு புரிந்த உருது சுல்தானுடைய படைத் தலைவன் "மாலிக்கபூர்" என்பான், கி. பி. 14-ம் நூற்றுண்டுத் தொடக்கத்தில், தமிழ்நாட்டுக்குள் நுழைந்து, நாட்டைக் கொள்ளை யிட்டான். மாலிக்கபூர், 600 யானைகளையும், 20 ஆயிரம் குதிரை களையும், ஓர் இலக்கம் பெட்டிகள் நிறையப் பொன், முத்துகளையும் கொள்ளை அடித்துச் சென்றான்.

மாலிக்கபூரின் படைகள் வந்ததன் காரணமாகப் பாண்டிய மன்னர்கள் தெற்கே சென்றனர்.

அதன் பின், தமிழகம் அயலவர் ஆட்சிக்கு அடிமைப்பட்டது. பிறநாட்டு மன்னர்கள் ஒருவர் பின் ஒருவராகத் தமிழகத்தைச் சூறை யாடினர்! தமிழ் இனத்தவர்கள் ஒற்றுமை குன்றி வாழ்ந்ததால், பிற நாட்டவர்களின் ஆட்சியைத் தடுக்க முடியாத நிலையில் வாழ்ந் தனர். தமிழகத்தின் அரசியல் வாழ்வு சீரழிந்தது.

வீரகேரளன் படையெடுப்பு

திருவாங்கூரை ஆண்ட வீரகேரளன் என்ற மலையாளத்து அரசன், சேர, சோழ பாண்டிய நாடு முழுவதையும் வென்று, சீர்காழியிலும், காஞ்சியிலும் அவனுடைய படைகளை நிறுத்தினான்.o தமிழ்நாடு முழுவதும் அவனுடைய கொடுங்கோல் ஆட்சிக்கு உட்பட்டுக் கிடந்தது.

வீர கேரளனுடைய கொடுங்கோல் ஆட்சியில் வாடிய தமிழ் மக்கள், விசயநகரப் பேரரசர்கள் அவனைத் தோற்கடித்தது குறித்து மகிழ்ச்சி அடைந்தார்கள். ஆனால், ஆந்திரப் படைத் தலைவன் "கெம்பண்ணன்" என்பான், தமிழ்நாட்டைக் கைப்பற்றி, தமிழ்நாடு முழுவதையும் விசயநகர ஆந்திரர்களுக்கு அடிமைப்படுத்தினான்!

ஆந்திரர் ஆட்சி

விசயநகரப் பேரரசின் படைத் தலைவர்கள், இக்கேரி, சீரங்கப் பட்டணம் வேலூர், செஞ்சி, தஞ்சை, மதுரை ஆகிய இடங்களில் வீற்றிருந்து, தமிழ் மக்கள் மீண்டும் தலைதூக்காவண்ணம் நேரடி ஆட்சி புரிந்தனர். தமிழ் அரசர்கள் மறைந்த பின்னர், "யார் ஆண்டால் என்ன?" என்று எண்ணிப் பிறநாட்டவர்களுக்கு அடங்கி, அடிமையில் ஊறி, போர் வலி இழந்து கிடந்தனர், தமிழ்நாட்டு மக்கள்!

பாண்டியர் படுகொலை

ஆந்திர மன்னர்கள் "நாயக்கர்" என்ற பெயரால் மதுரையையும், திருச்சியையும் தலைநகராகக் கொண்டு தமிழகத்தை ஆண்டார்கள். **வடநாட்டுப் பழக்க வழக்கங்களைத் தமிழ் மக்களிடையே பெருவாரியாகப் புகுத்தியவர்கள், ஆந்திர மன்னர்களே ஆவர். அவர்களில் முகாமையான விசுவநாத நாயக்கன் என்பான், பாண்டிய மன்னரின் குடிவழியினரைப் பூண்டோடு ஒழிக்க வேண்டும் என்று கருதி, பாண்டியர் மரபில் வந்தவர்களை எல்லாம் கொன்று குவித்தான்!** அரசபீடத்துக்கு உரிமை கோரிய கடைசி 5 பாண்டியர்கள்—பஞ்சவழுதிகள்—காயத்தாற்றில் வாளேந்திப் போரிட்டு, ஆந்திர மன்னன் விசுவநாத நாயக்கரின் படைகளால் கொல்லப் பட்டார்கள்.

---

o சேர நாடு என்பது தற்போது நாஞ்சில் என்றும், நாங்குநேரி என்றும் வழங்கப்படுகிற பகுதி. கேரளம் அல்லது திருவாங்கூர் என்பது வடவர்களில் ஒரு பிரிவினரான மலையாளிகள் வாழும் பகுதி.

ஆங்கிலேயர்கள்

நாயக்க அரசர்களுக்குப் பின், சந்தா சாகிப், ஐதர் அலி முதலிய உருது நவாபுகள் தமிழ்நாட்டைக் கைப்பற்றியதும், அவர்களுக்குப் பின் ஆங்கிலேயர்கள் தமிழ்நாட்டை அடிமைப்படுத்தியதும் தமிழகத்தின் வரலாற்றில் நன்கு தெரிந்த நிகழ்ச்சிகள்!

தில்லியார் வல்லாண்மை

ஆங்கிலேயர்கள் தமிழகத்தை விட்டுச் சென்றபோது, தமிழ்நாட்டைத் தில்லி அரசினரின் கீழ் ஒரு "மாகாணம்" என்று ஆக்கி, தில்லியாரின் வல்லாண்மைக்கு விட்டுச் சென்றனர். ஆகவே தமிழகம் இப்போது தில்லியின் பிடிப்பில் இருக்கிறது!

600 ஆண்டுகளுக்கு முன், தில்லி நவாபின் படைத் தலைவன் மாலிக்கபூர் தமிழ்நாட்டின் செல்வத்தை அள்ளிக்கொண்டு போனது போல், இன்றும் தில்லி வல்லாண்மை தமிழ்நாட்டைச் சுரண்டிக் கொண்டுதான் இருக்கிறது!

ஆனால், 600 ஆண்டு "அடிமைக் காலகட்டம்" இப்போது முடிந்து விட்டது.

தமிழ்த் தாயின் கண்ணீர்

இந்த 600 ஆண்டுகளில் தமிழ் மக்களின் அடிமை வாழ்வை நினைத்துப் பார்த்தால் கண்ணீர் சிந்தாமல் இருக்க முடியாது!

கி. பி. 14-ஆம் நூற்றாண்டு வரை, வெற்றிக்கொடி நாட்டி, உலகம் எல்லாம் வியக்கும்படியாக மேன்மை அடைந்த நாம், **முதலில் விசயநகர ஆந்திரர்களுக்கு அடிமை ஆனோம்! அதன்பின் உருதுக்காரர்களும், பின்னர் ஆங்கிலேயர்களும், பின்னர் இந்திக்காரர்களும் நம்மை அடிமை ஆக்கினார்கள்.** தமிழருடைய மானம் பறிபோயிற்று! தமிழ்த் தாயின் மானத்தைப் பாதுகாக்க முடியாமல், தமிழ் மக்கள் துன்பத்திற்கு ஆட்பட்டோம்.

உறுதி! உறுதி!

அந்தக் "கறுப்பு"க் கால வட்டத்தை இப்போது கடந்து விட்டோம். தமிழகத்தின் "பொற்காலம்" மீண்டும் தோன்ற வேண்டிய நேரம், நம்முடைய காலத்தில் வந்து விட்டது,

600 ஆண்டுக் காலம் முடிந்து விட்டபடியால், தமிழ் மக்கள் விழித்து எழுவது உறுதி! மீண்டும் உலகத்தின் உச்சியை எட்டிப் பிடிப்பது உறுதி!

இதுதான் வரலாற்றின் வலுக்கட்டாயமான போக்கு! இதைத் தடுத்து நிறுத்த எந்த மாந்தராலும் முடியாது! (தொடரும்)

தொடர்-2

பாரதிதாசன் பாடல் தொகுதியில் பாட வேறுபாடு

—பர். ச. சு. இளங்கோ, க. மு

நூலின் தலைப்பில் உள்ளடக்கிய பாடல்கள்:

'பாரதிதாசன் கவிதைகள்' இரண்டாம் தொகுதி முதற்பதிப்பில் சிறுகாப்பியம், வாழ்க்கை, தமிழன், பாரதி, திராவிடநாடு, காதல், பன்மணித்திரள், இயற்கை ஆகிய 8 தலைப்புகள் காணப்படு கின்றன. ஆயினும் பின்னர் வந்த பதிப்புகளில் சிறுகாப்பியம், இயற்கை. காதல், பாரதி, திராவிடநாடு, திராவிடன், பன்மணித் திரள் ஆகிய 7 தலைப்புகள் காணப்படுகின்றன.

முதற்பதிப்பில் இடம் பெற்றுள்ள 'வாழ்க்கை' எனும் தலைப்பு, பின்னர் வந்த பதிப்புகளில் நீக்கப் பெற்று அத் தலைப்பில் உள் ளடங்கிய கவிதைகள், 'காதல்', 'பன்மணித்திரள்' ஆகிய தலைப்பில் பிரித்துச் சேர்க்கப்பட்டன.

(1) முதற்பதிப்பில் 'சிறுகாப்பியம்' எனும் தலைப்பில் 'போர் மறவன், ஒன்பது சுவை, நான் மாவலிபுரம் சென்றமை, அறம் செய்க, கற்பனை உலகில், குழந்தை ஆகிய 6 பாடல்கள் இடம் பெற் றுள்ளன. அவற்றுள் 'நான் மாவலிபுரம் சென்றமை' எனும் பாடல் 'இயற்கை' என்ற தலைப்பிலும், 'அறம் செய்க, கற்பனை உலகில் குழந்தை ஆகிய பாடல்கள் பன்மணித்திரளிலும் பின்னர் வந்த பதிப்புகளில் சேர்க்கப்பட்டன.

(2) முதற்பதிப்பில் 'வாழ்க்கை' எனும் தலைப்பில்; 'வாழ்வு, கொட்டுமுரசே, மெய்யன்பு, பெற்றோர் இன்பம், பணமும் மணமும் ஆகிய 5 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் 'வாழ்வு', 'கொட்டுமுரசே' ஆகிய பாடல்கள் 'பன்மணித்திரள்' எனும் தலைப் பிலும், 'மெய்யன்பு, பெற்றோர் இன்பம், 'பணமும் மணமும்' ஆகிய பாடல்கள் 'காதல்' எனும் தலைப்பிலும் சேர்க்கப்பட்டன. எனவே பின்னர் வந்த பதிப்புகளில் 'வாழ்க்கை' எனும் தலைப்பு நீக்கப்பட்டு விட்டது.

(3) முதற்பதிப்பில் 'தமிழன்' எனும் தலைப்பில், 'தமிழனுக்கு வீழ்ச்சி யில்லை, தமிழன், பகை நடுக்கம், கூவாய் கருங்குயிலே, தமிழர்களின் எழுதுகோல், இசைத் தமிழ், தொழில் ஆகிய பாடல்கள் அமைந்துள்ளன. அவற்றுள் தொழில் எனும் பாடல் பின்னர் வந்த பதிப்புகளில் 'பன்மணித்திரள்' எனும் தலைப்பில் சேர்க்கப் பட்டுள்ளது.

(4) முதற்பதிப்பில் பாரதி எனும் தலைப்பில், 'புதுநெறி காட்டிய புலவன், தேன் கவிகள், பாரதி உள்ளம், மகாகவி பாரதியார், செந்தமிழ் நாடு, திருப்பள்ளி எழுச்சி, நாடக விமரிசனம்' ஆகிய பாடல்கள் அமைந்துள்ளன. அவை அனைத்தும் பின்னர் வந்த பதிப்புகளில் நீக்கமும் மாற்றமும் இன்றி அமைந்துள்ளன.

(5) முதற்பதிப்பில், 'திராவிட நாடு' எனும் தலைப்பில் 'இனப் பெயர், திராவிடன் கடமை, அது முடியாது பிரிவு தீது, உணர வில்லை, உயிர் பெரிதில்லை, இனி எங்கள் ஆட்சி ஆகிய பாடல்கள் அமைந்துள்ளன. அவை அனைத்தும் பின்னர் வந்த பதிப்புகளில் நீக்கமும் மாற்றமும் இன்றி அமைந்துள்ளன.

(6) முதற்பதிப்பில் 'காதல்' எனும் தலைப்பில், 'தொழுதெழுவாள், அவன் சொல்லும் செயலும், இருவர் ஒற்றுமை ஆகிய பாடல்கள் அமைந்துள்ளன. அப் பாடல்கள் அனைத்தும் பின்னர் வந்த பதிப்புகளில் இடம் பெற்றிருப்பதோடு பந்துபட்டதோள், தன்மான உலகு, மெய்யன்பு, பெற்றோர் இன்பம், பணமும் மணமும், திருமணம், கருத்துரைப் பாட்டு, கதவு பேசுமா? ஆகிய பாடல்களும் புதிதாகச் சேர்க்கப் பெற்றுள்ளன.

(7) முதற்பதிப்பில் 'பன்மணித்திரள்' எனும் தலைப்பில் 'கடவுள் மறைந்தார், கடவுளுக்கு வால் உண்டு, மாதர்கள் விரத பலன், அந்தச் சுதந்திரம் எந்த நாளும் உண்டு, பெண் குரங்குக் கல்யாணம், கோயிலுக்கு ஏசுநாதர் வரவில்லை, கற்பின் சோதனை, தலையுண்டு செருப்புண்டு, எண்ணத்தின் தொடர்பே, சங்கங்கள், குடியானவர், மடமை ஓவியம், நாடகம் சினிமா நிலை, படத்தொழில் பயன் ஆகிய பாடல்கள் அமைந்துள்ளன. ஆயின் 'கோயிலுக்கு ஏசுநாதர் வரவில்லை' எனும் பாடல் பின்னர் வந்த பதிப்புகளில் நீக்கப்பட்டுள்ளது. அதற்குரிய காரணம் முன்னரே சுட்டப்பட்டது.

(8) முதற்பதிப்பில் 'இயற்கை' எனும் தலைப்பில், 'அதிகாலை வானம்பாடி, சர். பன்னீர்ச்செல்வம், கருத்துரைப் பாட்டு, திராவிட நாட்டுப்பண் ஆகிய பாடல்கள் அமைந்துள்ளன. அவற்றுள் 'சர். பன்னீர்ச்செல்வம்', 'திராவிடன்' எனும் தலைப்பிலும் 'கருத்துரைப் பாட்டு', 'காதலன்' எனும் தலைப்பிலும், திராவிட நாட்டு பண் எனும் பாடல் நூலின் முன்னேயும் பின்னர் வந்த பதிப்புகளில் இடம் பெற்றுள்ளன.

முதற்பதிப்பில் எட்டுத் தலைப்புகளில் உள்ளடக்கிய பாடல்கள், முறையாகப் பகுக்கப்படாத காரணத்தால் பாவேந்தர் இம்மாற்றத்தை நிகழ்த்தினர் எனலாம்.

எடுத்துக் காட்டாக முதற்பதிப்பில் 'இயற்கை' எனும் தலைப்பில் சர். பன்னீர்ச்செல்வத்தைப் பற்றிய பாடல் உள்ளது. அப்பாடல்

திராவிடன் எனும் தலைப்பில் அடங்கியிருக்குமாயின் மிகவும் சிறப்பாகவும், பொருத்தமாகவும் இருக்கும் என்பதால், இம்மாற்றத்தைப் பாவேந்தர் நிகழ்த்தியிருக்கலாம். பிறவும் இதுபோல் என்க.

பாடல்களுள் பாட வேறுபாடு :

இப் பாடல் தொகுதியுள் நிகழ்ந்துள்ள பாட வேறுபாட்டை நான்கு வகையாகப் பிரித்து ஆராயலாம். அவை *(1)* அச்சுப் பிழைகள்; *(2)* பாவேந்தரால் திருத்தம் பெற்றமை; *(3)* பாவேந்தரால் நீக்கப் பெற்றவை; *(4)* பாவேந்தரால் சேர்க்கப் பெற்றவை; என்பனவாகும்.

பாரதிதாசன் வாழ்ந்த காலத்திலேயே **(1891-1964)** இந்நூலின் பல பதிப்புகள் வெளிவந்துள்ளன. எனவே இந்நூலில் காணப்படும் திருத்தங்களும், நீக்கல்களும், சேர்த்தல்களும் பாரதிதாசன் ஒப்புதல் பெற்றே நிகழ்ந்துள்ளன எனக் கொள்ளல் வேண்டும். எனவே திருத்தங்களும், பிறவும் பாவேந்தரால் செய்யப் பட்டன என்று இங்குக் கொள்ளப்பட்டது.

1. அச்சுப் பிழைகள் :

பாரதிதாசனின் பிற பாடல் தொகுதிகளை நோக்கக் குறைந்த அளவே அச்சுப் பிழைகள் இந்நூலில் காணப்படுகின்றன. அவை வருமாறு :

1) 'சென்று வர விடை கொடு சிரிப்போடும் **களிப்போடும்**' (இ. ப. பக்-3) என்பதில் 'களிப்போடும்' என்பது '**கலிப்போடும்**' (மு. ப. பக்-2) என்று அச்சாகியுள்ளது.

2) '**சந்ததமும்**' தொழிலாளர்—புயம்
தரும் துணையின்றி' (மு. ப. பக்-14)

என்பதில் 'சந்ததமும்' என்பது '**சந்தமும்**' (இ. ப. பக்-25) என்று அச்சாகியுள்ளது.

3) 'துருக்கர் கிறித்தவர் சூழ்இந்துக்களென்
றிருப்பவர் தமிழரே **என்பதுணராது**' (மு. ப. பக்-54)

என்பதில் 'என்பதுணராது' என்பது **எண்பதுணராது**' என்று (மு. ப. பக்-38) அச்சாகியுள்ளது.

4) 'கவிழ்க்கும் பகையைக் **கவிழ்க்கும்** கவிமுரசு' (இ. ப. பக்-55) என்பதில் 'கவிழ்க்கும்' என்பது 'கவிழிக்கும்' (மு. ப. பக்-39) என்று அச்சாகியுள்ளது.

1946-இல் சென்னையிலிருந்து வெளிவந்த 'குயில்' இதழே இத் தனிப் பாடலை முதன் முதலில் வெளியிட்டது. அவ்விதழிலும் 'கவிழ்க்கும்' என்றே அச்சாகியுள்ளது என்பது நோக்கத் தக்கது (பக்-11)

5) 'உதிர்த்திடுக பொன்மலர்கள் உயர்கைகள் நன்றே
உணர்ந்திடுக உளங்கவரும் **புதுமணத்தை** யாண்டும்'
என்பதில் 'புதுமணத்தை' என்பது 'புதுமணத்தே' என்று (மு. ப. பக்-43) அச்சாகியுள்ளது. (மு. ப: பக்-87)

புதுமணத்தை உணர்ந்திடுக என்பதில் ஓசைநயமும், பொருள் தெளிவும் கொண்டு விளங்குவதால் 'புதுமணத்தே' என்பது அச்சுப் பிழையாகும்.

6) '**பொய்ம்மதம்** பிறிதெனப் புளுகுவீர்' (இ. ப. பக்-55) என்பதில் 'பொய்ம்மதம்' என்பது 'பொய்மதம்' (மு. ப. பக்-39) என்று அச்சாகியுள்ளது.

7)' அவ்விடம் **நீர்ப்பரப்பு**-ஆழ்கடல்உள்ளதே' (இ.ப.பக்-55) என்பதில் 'நீர்ப்பரப்பு' என்பது 'நீர்ப்பறப்பு' (மு. ப. பக்-39) என்று அச்சாகியுள்ளது.

8) பாமர மக்கள் மகிழ்திட வைத்தல்
படங்களின் நோக்க மெனில்
நாமம் குழைத்திடவோ அறிவாளர்கள்
நற்கலை கண்டார்கள் …….(மு. ப. பக்-89)
என்பதில் 'நற்கலை' என்பது 'புற்கலை' (இ. ப. பக்-122) என்று அச்சாகியுள்ளது.

'நாமம்' எனத் தொடரும் பாடலடியை நோக்க, 'நற்கலை' என்பதே பொருத்தமான மோனை ஆகையால் 'புற்கலை' என்பது அச்சுப் பிழையாகும்.

9) 'செய்திடும் சூழ்ச்சி அண்ணே—அதைக்
கொய்திட வேண்டும் அண்ணே!' (மு. ப. பக்-103)
என்பதில் 'அண்ணே' என்பது 'மண்ணே' (மு ப. பக்-61; (இ. ப. பக்-77) என்று அச்சாகியுள்ளது.

10) 'தனித்தல் உனக்கும் எனக்கும்—நொடி (இ. ப. பக்-34)
நினைப்பின் **வருத்தம்** மனத்தில் அத்தான் (மு. ப. பக்-)
என்பதில் வருத்தம் என்பது விருத்தம் என்று அச்சாகியுள்ளது.

11) 'இந்நிலையில் **நாடகத்தில்** தமிழோ, காதை
இருகையால் மூடிக்கொள் என்று சொல்லும் (இ. ப. பக்-125) என்பதில் 'நாடகத்தில்' என்பது 'நாகடத்தில்' என்று (மு. ப. பக்-90) அச்சாகியுள்ளது.

12) '**வானூர்தி** மேலிருந்து வல்ல தமிழிசை ஞுன்
தானூதும் வேய்ங்குழலா?….' (இ, ப. பக்-21) என்பதில் 'வானூர்தி' என்பது 'வானூர்த்தி' (மு. ப. பக்-94) என்று அச்சாகியுள்ளது.

ஆண்களுக்கு ஏற்படும் பாலியல் கோளாறுகள்

மருத்துவ அறிஞர். கோ. கோவிந்தனார்.

கலவிக் கட்டுப்பாடு

கலவிக் கட்டுப்பாடு, விரைவு ஒளிநீர் வீழ்கைக்கு நேர் எதிரிடையானது. புணர்ச்சியில் கலவிக் கிளர்ச்சியும், ஒளிநீர் வெளியாவதும் புணரும் மாந்தனுடைய முழுக் கட்டுப்பாட்டிற்குள் அடங்கி இருக்கின்றன. இதனால் புணர்ச்சியில் தன் நோக்கப்படி உச்சநிலை மாற்றக்கூடிய ஆற்றல், புணரும் அம்மாந்தனுக்கு உண்டாகிறது. இந்தக் கட்டுப்பாடு ஒரு குறிப்பிட்ட அஃதாவது, முப்பது நிமையங்கள் வரை என்ற அளவைக்குள் அடங்கியதாக இருக்கலாம். அல்லது எவ்வளவு நேரத்திற்கானாலும், கட்டுப்பட்டு நிற்கலாம். புணர்ச்சியின் முடிவில் கலவிக் கிளர்ச்சியோ, அல்லது விந்து வெளியேறுவதோ கூட இல்லாமல் இருக்கலாம். இம்முறையால் நன்மையும் ஏற்படலாம். தீமையும் ஏற்படலாம். எந்தச் சூழ்நிலையில் இம்முறை கைக்கொள்ளப்படுகிறது என்பதைப் பொருத்தது. கலவிக் கட்டுப்பாட்டைக் கைக்கொள்ளல் விரைவு ஒளிநீர் வீழ்வதை நிறுத்தப் பயன்படும் என்பதைப் பார்த்தோம். ஆனால் கட்டுப்பாட்டை மிக மிகுந்த அளவில் கைக்கொளின் முடிவில் அலித் தன்மை ஏற்பட்டாலும் ஏற்படலாம்.

புணர்ச்சியை அறவே நீக்கல் என்பது கலவிக் கட்டுப்பாட்டில் ஒரு புரட்சிகரமான வகையாகும். நுணுகி ஆராயின் இவ்வகை, கலவிக் கட்டுப்பாட்டினின்றும் வேறுபட்டது என்பது தெற்றெனத் தெளிவாகும். இவ்வகையைப் பலர் மிகுதியாகப் புகழ்கின்றனர். புகழ்பவர்கள் எல்லாம் மதம் அல்லது அறம் பற்றி பேசுகின்றனரே ஒழிய மாந்தக்கண் கொண்டு நோக்கிலர். கலவி இன்பத்தை ஒரு மாந்தன் நீக்கிவிட்டால், அம்மாந்தனுக்கு எவ்வகைத் தீங்கும் உண்டாகாது; மாறாக உடலும், உயிரும், மனமும் நன்னிலையை அடை

(முன்பக்கத் தொடர்ச்சி)

13) 'இல்லை என்று சொல்லாமல் இதழ்கள் மாற்றி
அவை சாய்த்த அமுதுண்போம்; இன்னும் போவோம்'

(மு. ப. பக்-17) என்பதில் 'அவை சாய்த்த' என்பது 'அவை சாய்ந்த' (இ. ப. பக்-97) என்று அச்சாகியுள்ளது.

இவ்வாறு குறைந்த அளவே அச்சுப் பிழைகள் காணக் கிடக்கின்றன. அவையும் பொருள் பெரிதும் திரிந்து மயக்க மூட்டாத அச்சுப் பிழைகளே ஆகும்.

(தொடரும்)

கின்றன என நினைக்கின்றனர். இவ்வாறு நினைக்க, அவர்கள் ஒன்று கலவி வேலைகளைப் பற்றியே அறியாதவர்களாக இருக்க வேண்டும்; இல்லாயின் அறிந்தும் உண்மையை மறைப்பவர்களாக இருக்க வேண்டும். வெவ்வேறு மாந்தர்களுடைய கலவித் தன்மைகளில் உள்ள வேற்றுமைகளைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதாகவே தெரியவில்லை.

ஒரு குறிப்பிட்ட துறவி எவ்வகைத் துன்பமின்றியும், தொல்லை இன்றியும் கலவி இன்பத்தை முழுவதும் நீக்கி வாழலாம். அத்துறவி எவ்வகைக் கடினமும் இன்றிக் கலவி இன்பத்தை நீக்கி வாழ்கின்றாரே, அதனால் யார் வேண்டுமானாலும் முயன்றால் அத்துறவி போல் வாழ இயலும் எனப் பலர் நினைக்கின்றனர். இஃது எது போல இருக்கின்றது என்றால், ஒரு மல்லன் அறுநூறு பவுண்டு எடையை எளிதில் தூக்கியதைப் பார்த்த பலர், யார் வேண்டுமானாலும் முயன்றால் அவ்வளவு எடையைத் தூக்க இயலும் எனக் கூறுவதோடு ஒக்கும். கலவி இன்பத்தை ஒருவர் எவ்வகைத் தொல்லையும் இன்றி நீக்கிவிட இயலுமானால் அவர் இயற்கையான மாந்தர் அல்லர். மாந்த குலம் முழுவதிற்குமே அவரை ஓர் எடுத்துக்காட்டாகக் கொள்வது பொருந்தாது. நீண்டகாலம் துறவறம் பூண்டவர்களின் கலவி உறுப்புகள், பலகாலம் வேலையற்று இருப்பதால், வலு அற்றுப் போகின்றன. அதனால் கலவி உறுப்புகள் செய்யக்கூடிய தொழிலாகிய புணர்ச்சியை நீக்குதல் அவர்களுக்கு ஓர் அரிய செயலன்று. ஆகவே நண்பர்களே! கொஞ்சம் எண்ணிப் பாருங்கள்! இவர்களை எடுத்துக்காட்டாகக் கொண்டு, புணர்ச்சியைக் கைவிடல் எளிது எனக் கொள்ளல் பொருந்துமா?

பால் உணர்ச்சி என்றால் என்ன என்பது பற்றி அறியாதோர், அதைப் பற்றி பேசப் புகுதல் என்னே வியப்பு! ஆண்குறி தசையால் ஆனதன்று. அது நல்ல நிலையில் இருக்க, அதற்கு எப்பயிற்சியும் வேண்டற்பாலதன்று என நினைக்கின்றனர். ஆண்குறியை மட்டும் எடுத்துக் கொண்டால் அது தசையால் ஆனது அன்றுதான். ஆனால் அது வேலை செய்ய, தமக்குள் மிக நெருங்கி ஒத்துழைக்கும் பல தசைகளின் அசைவு இன்றியமையாதது. புணர்ச்சி நீக்கப் பட்டால் இத்தசைகள் வேலை அற்றுப் போகின்றன. அதனால் நசித்துப் போகின்றன. 'புராசுடேட்டின்' தசைகளும், ஒளிநீரின் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தும் தசைகளும், அத்தசைகளில் முதன்மையானவை. பயன்படுத்தப்படாது இருப்பினும், சுரப்பிகள் கெடுவதில்லை என வழக்காடுகின்றனர். கொங்கையை இதற்குச் சான்றாகக் கூறுகின்றனர். கொங்கை பலகாலம் பயன்படுத்தபடாது இருப்பினும், குழந்தை பிறந்த பின் வேலை செய்யத் தொடங்குகிறது. அதே போன்று பால் வேலைகளுக்கு அடிப்படையான ஆண்சுரப்பிகள், பலகாலம் பயன்படுத்தப்படாது இருப்பினும்

கெட்டுப் போவதில்லை என வழக்காட வரிந்து கட்டுகின்றனர். ஐயகோ! அவர்கள் நினைப்பு எவ்வளவு பிழையானது! சுரப்பிகள் பயன்படுத்தப்படா விட்டால் கெடுவதில்லைதான். அஃது இந்த இடத்திற்கு எப்படிப் பொருந்தும்? ஆண்மை, சுரப்பியின் வேலையிலும், வித்தின் தன்மையிலுமா அடங்கி உள்ளது. இல்லவே இல்லை. **ஆண்மை என்பது பல்வேறுபட்ட செய்கைகளால் ஆய கூட்டுச் சேர்க்கை.** அவை முழுவதையும் ஒன்று சேர நோக்க வேண்டுமேயன்றி, தனித்தனியே பிரித்து நோக்கக் கூடாது. கரு உறச் செய்யும் தன்மை, காலவரம்பிற்கு உட்பட்டு, பலகாலம் பயன் படுத்தப்படாமல் இருந்தாலும் பழுது அடைவது இல்லைதான். ஆனால் கரு உறச் செய்யும் தன்மையும் ஆண்மையும், ஒன்றன்று என்பதை நன்கு மனதில் பதிக்க வேண்டும்.

புணர்ச்சி நீக்கி வாழ்தல், ஒருவனுக்கு நன்மை பயப்பதோடல்லாமல், அவனை முன்னிலும் வலு உள்ளவனாகச் செய்கின்றது என்ற எண்ணம் இருக்கின்றதே, அந்த எண்ணம்தான் அவர்கள் கொண்டுள்ள பிழைபட்ட எண்ணங்களுள் தலையாயது. படைக்கும் ஆற்றல் உடைய ஒளிநீர்தான் உடலில் சுரக்கும் நீர்களுக்குள்ளே முதன்மையானது என நினைக்கின்றனர். புணர்ச்சியின் மூலமாகவோ, கை இன்பத்தின் மூலமாகவோ மற்று எவ்வழி மூலமாகவோ ஒளிநீரை இழத்தல் வலுவையும், ஆண்மையையும் குறைக்கும் என நினைக்கின்றனர். புணர்ச்சியை அறவே நீக்கின் ஒளிநீர் இழப்பு நேருவதில்லை. ஒளிநீர் சேர்த்து வைக்கப்படுகிறது. வேண்டும் பொழுது, இவ்வொளிநீரை உடலின் உள் உறிஞ்சச் செய்து, வலுவையும், ஆற்றலையும் கொடுக்கப் பயன்படுத்தலாம் என நினைக்கின்றனர். இந்நினைப்புகள் வித்துகளின் தன்மையை அறியாமையால் எழுந்தவையே. வித்திற்கு இருவகை வேலைகள் உண்டு என்பதை முன்பே பார்த்தோம். அது தன் உட்புறமிருந்து ஒருவகை நீரையும் தன் வெளிப்புறமிருந்து ஒருவகை நீரையும் சுரக்கின்றது. வெளிப்புறமிருந்துவரும் நீர்தான் ஒளிநீர். பால் வேலைகளைச் செய்வதும், கரு உறச் செய்வதும்தான் ஒளிநீரின் வேலைகள். இந்த ஒளிநீர் அவ்வேலைகளைச் செய்யப் பயன்படுத்தப்படவில்லை எனக் கொள்வோம். அத்துடன் அந்த ஒளிநீர் கை இன்பத்தின் மூலமாகவோ, அல்லது தூக்கத்திலோ வெளியேறவில்லை எனவும் கொள்வோம். ஆகவே ஒளிநீர் வெளியேற்றப்படாமல் ஒளிநீர்ப் பையில் தங்குகிறது. தங்கி உள்ள ஒளிநீர் கேடு விளைவிக்கும் நுண்ணிய புழுக்கள். அஃதாவது, நுண்ணம் பெருகி வளர ஏற்ற விளை நிலமாக அமைகிறது. ஒளிநீர் அப்படியே, முழுமையாக உடம்பினுள் உறிஞ்சப்படுவதில்லை. வித்தின் உட்புறமிருந்து சுரக்கப்படும் நீர், இடைக்கண்ணறைகளிலிருந்து வருகிறது. இதுதான் உடம்பினுள் உறிஞ்சப்படுகின்றது.

உடம்பில் இந்த நீரின் ஆட்சிக்கு உட்படாத இடமே இல்லை என லாம். அதன் சுரப்பு ஒளிநீரின் செலவாலோ அல்லது சேர்த்து வைக்கப்படுவதாலோ கேடு அடைவதில்லை. புணர்ச்சியின்போது இந்நீர் கொஞ்சம்கூட இழக்கப்படுவதில்லை.

வளர்ச்சி அடைந்த மாந்தன், அஃதாவது இயற்கையாக உண் டாகக்கூடிய பால் உணர்ச்சி உள்ள மாந்தன், பலகாலம் முழுக்க முழுக்க பால் உணர்ச்சியை நீக்கி வாழின், அம்மாந்தன் நாளா வட்டத்தில் அலித்தன்மையை அடைகிறான். **ஒருவன் தன் தேவைக்குத்தக புணர்ந்து வரின், அவன் ஆண்மையை காக்க அஃது உதவுகின்றது.** பொது மாந்தன் தன்னைக் கட்டுப் படுத்திக் கட்டாயப்படுத்திப் புணர்ச்சியை நீக்குவதால் உண்டாகும் பலன்களைப் பற்றி உள நூல் மருத்துவத்தின் தந்தை என போற்றப் படும் பிராய்டு அவர்களின் விளக்கம் மிக வியப்பானது:

"புணர்ச்சி இன்பத்தை அடக்கியவர்கள் இடையேதான், சுறு சுறுப்பான தொழில் மேதைகள், எண்ணச் சிற்பிகள், நாட்டு விடுதலை மறவர்கள், மத ஆசிரியர்கள் முதலானவர்கள் தோன்று கின்றனர் எனக் கூறின் நான் நம்பேன். அவர்கள் பொது மக்களி டமேதான் தோன்றி மிளிர்கின்றனர். எவ்வளவுக் கெவ்வளவு நாம் புணர்ச்சி இன்பத்தை அடக்க முயல்கின்றோமோ அவ்வளவுக் கவ்வளவு அடக்குவது கடினமாகி, அடக்க முடியாத ஒரு நிலை வந்தெய்துகிறது. நம் தற்காலப் படிப்பு முறை, மணமாகும் வரை மனதை அடக்கிப் பின் ஒரேயடியாக கட்டவிழ்த்து விடப்பட வழி வகுத்துத் தருகிறது. உணர்ச்சியைத் தழுவி நடப்பதை விடுத்து, அதற்கு நேர் எதிராகக் கட்டுப்படுத்தினால், பல தீமைகள் நேரலாம். இக்காலத்தில் கட்டுப்பாட்டின் கடுமை மிக மிகுதி. இந்தக் கடுமை யான கட்டுப்பாடு திடீரென நீக்கப்படுவதால் மனம்நிலை கெட்டுத் திரிகின்றது. அம் மாந்தனை படுகுழியில் தள்ளி, நினைக்க ஒண்ணா தீமைகளை விளைவிக்கின்றது. ஒருவனுக்கு மணம் ஆவதற்கு முன் புணர்ச்சி இன்பம் என்றால் எப்படி இருக்கும் என்பதே தெரிந்து இருக்கக்கூடாது. அப்பேர்பட்ட மாந்தன்தான் நல்ல கணவன் ஆக முடியும் என மக்கள் நினைக்கின்றனர். இக்கொள்கை சீரியது அன்று." என்பவை பிராய்டு அவர்களின் நோக்கங்களாம்.

பிராய்டு அவர்களின் நோக்கங்களை இங்குக் குறிப்பிட்டது, அவற்றை அப்படியே நாம் ஒத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தால் அன்று. அவற்றின் உட்பொருளை நாம் ஆராய வேண்டும் என்பதுதான். ஒவ்வோர் இளைஞனும் மணம் ஆவதற்கு முன், ஆண் பெண் உடற்கூறுகளைப் பற்றியும், புணர்ச்சியின் தன்மையையும், முறைகளையும் நன்கு அறிந்திருக்க வேண்டும் என்பதுதான்.

(தொடரும்)

உடல்நலம் - மருத்துவம்!

சில பயனுள்ள குறிப்புகள்

- சுண்ணும்பும் விளக்கெண்ணெயும் கலந்து காய்ச்சிப் பொறுக்கும் அளவு சூட்டோடு தொண்டை மேல் தடவ, தொண்டை வலி, தொண்டைக் கட்டு நீங்கும்.
- கசகசா, கற்கண்டு, வால்மிளகு, தோல் நீக்கிய வாதுமைப் பருப்பு—இவற்றைச் சம எடை எடுத்து இடித்துச் சலித்து அரைத்துத் தேவையான அளவு நெய், தேன் சேர்த்துக் கலந்து வைத்துக்கொண்டு 2 தேக்கரண்டி மூன்று வேளை சாப்பிட்டு வர, அரத்த மூலம், குளிர் கழிச்சல் (சீதபேதி), விந்து இழப்பு இவை குணமாகும்.
- வாதுமைப் பருப்பு 5 முதல் 10 வரை கசகசா அரை தேக்கரண்டி இரண்டையும் பாலில் அரைத்துப் பசும்பாலில் கலந்து காய்ச்சிச் சாப்பிட, தாய்ப்பால் நிறைய ஊறும்.
- பருத்திப் பால் உடலுக்கு நல்ல வலிவைத் தரும்.
- ஆண்களுக்கு மார்புக் காம்பு வீங்கி யிருந்தால் ஆமை ஓட்டை அரைத்துப் பூசி இரண்டு மணி நேரம் கழித்துக் குளித்து வரவும். மார்பு வீக்கம் கரைந்து போகும்.
- தராசுக் கொடி இலையை வாயிலிட்டு மென்று சுவைத்துக் கொண்டு வர குரல் கணீர் என்று ஆகும். குரல் கம்மல் வராது.
- பசும்பாலில் முந்திரிப் பருப்பும் கற்கண்டும் சேர்த்துக் காய்ச்சி இரவில் (உணவுக்குப்பின்) அருந்தி வர உடல் வலுப்பெற்று விளங்கும்.
- சாதிக்காய், கடுக்காய், துளசிவிசை, சுக்கு நான்கும் சம அளவாகப் பொடித்துத் துணியில் சலித்து வைத்துக் கொண்டு இரவு உணவுக்குப்பின் படுக்கப் போகும் பொழுது அரை தேக்கரண்டி பாலில் போட்டு நாற்பது நாட்கள் அருந்தி வர உடல் மிகவும் வலுப் பெற்று விளங்கும்.
- சாதிக்காயைத் தேவையான அளவு ஆவின்பால் சிறிது விட்டு அரைத்துச் சாந்தையெடுத்துக் கண்களைச் சுற்றி இரவில் பற்றுப் போட்டுக் கொண்டு படுத்துக் காலையில் கழுவி விட, கண்கள் ஒளி மழுக்கம் நீங்கி மிகவும் துல்லியமாகத் தெரியும்.
- நான்கு வாதுமைப் பருப்பையும் ஒரு தேக்கரண்டி கசகசாவையும் தண்ணீரில் ஊறவைத்துப் பின் வாதுமைப் பருப்பின் தோல் நீக்கி, இரண்டையும் மைபோல் அரைத்துக் காய்ச்சிய ஆவின் பாலில் கலந்து, கற்கண்டு சேர்த்துக் காலையில் மட்டும் 40 நாட்கள் அருந்தி வர, நரம்புத் தளர்ச்சி நீங்கி உடல் மிக வலுப் பெற்று விளங்கும்.

நோய் வராமல் தடுப்பவன் அறிஞன்; வந்து தடுப்பவன் மாந்தன்; வந்தும் தடுக்காதவன் பிணம்.

தொடர்-2

தனித்தமிழியக்கத்தின் பின்னணி!

—க. தமிழமல்லன், க. இ.

மறைமலை அடிகளாரின் 'ஆங்கில முன்னுரைகளை'க் குறை கூறும் வன்பர்கள், 'தீ. நா. பா.க்'களின் தலைகீழ்ப் புரட்டுகளைக் கருதிப் பார்க்கவும் முன் வாராமை ஏன்? எல்லாம் 'அக்கிராகர அரவணைப்பே!'

இவர் போன்றே அக்காலத்தில் தம்முடைய ஏட்டில் தனித் தமிழில் எழுதும் போட்டிக்குப் பரிசளிப்பு விளம்பரஞ் செய்த சுப்பிரமணிய சிவாவும் சிவத்தம்பியால் தனித்தமிழ் இயக்கத்தவ ராகக் குறிக்கப்படுவதும் அதிலும் அவரை ஒரு பெரும் பிரிவின் தலைவராகக் கொள்வதும் மிகவும் நகைப்பிற்கிடமானவையே!

சுப்பிரமணிய சிவாவின் விளம்பரம் தனித்தமிழை முழுக்கப் பழிப்பதாகவும் தனித்தமிழால் ஒரு செய்தியை யாராலும் எழுத இயலாது என்றுணர்த்தி விடுவதற்காகவுமே தரப்பட்டது. இதனை அவ்விளம்பரத்தைப் படிப்பவர் எவரும் நன்கு விளங்கிக் கொள்ள வியலும்!

'ஞானபாநு' இதழில் 1915 சூலை மாதம் வெளிவந்த விளம்பரம் வருமாறு :

"ஐந்து ரூபாய்!"

"உங்களால் தனித்தமிழ் எழுத முடியுமா? முடியுமானால் முந்துங்கள். சமஸ்கிருதம் முதலிய அந்நிய பாஷைச் சொற்களில் ஒன்றும் கலவாது தனித்தமிழில் நமது 'ஞானபாநு'வில் எட்டுப் பக்கத்துக்குக் குறையாது வரும்படியாக தமிழ்ப் பாஷையின் சிறப் பைப் பற்றியாவது திருவள்ளுவ நாயனாரின் சரித்திரத்தையாவது எழுதுவோருக்கு ரூபாய் ஐந்து இனாமளிப்பதாகத் தமிழபிமானி யாருவர் முன் வந்திருக்கிறார்."

"சமஸ்கிருதச் சொல்லாகிய கஜம் திரிந்து தமிழில் கயம் என்றாகியிருப்பது போன்ற திரிபுச் சொற்களும் உபயோகப்படுத்த லாகாது. சுருக்கத்தில் எந்தப் பாஷையின் சொற்களுக்கும் சம்பந்த மில்லாத தனித்தமிழ்ச் சொற்களே உபயோகிக்கப்பட வேண்டும்."

"வியாசங்கள் வருகிற ஆவணி மீ 15 ம் திகதிக்குள் நமது ஞானபாநு காரிய ஸ்தலத்திற்கு அனுப்பிக் கொடுக்கப்பட வேண்டு மென்று தெரிவிக்கப்படுகிறது. வெகுமதிக்குரித்தாகிய வியாச மானது நமது பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். இவ்விஷயத்தைப்

பற்றி மற்ற விஷயங்கள் வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்க.''

''கார்யஸ்தர்''
''ஞானபாநு''

விளம்பரம் எப்படி?

மற்றப் பார்ப்பனத் தமிழ்ப்புலவோரும் இவரைப் போன்றுரே யாவர். உ. வே. சாமிநாதரும் 'பிற சொற்களைக் கலக்கக் கூடாது' என்று கூறிவிட்டு மேடையினின்றிறங்கியதும் ''வணக்கம்'' என்று கூறிய ஒருவரைக் கடிந்து ''நமஸ்காரம்'' கூறச் சொன்னதை நாம் நினைத்தல் வேண்டும். பாரதியின் 'தனித்தமிழ் விருப்பும்' இத்தகைத்தே!

தமிழுக்காகப் பரிந்து பேசுவதையும் தமிழ்ப் பற்றையும் தனித் தமிழ் உணர்வையும் வேறுபடுத்தியறிய மாட்டாதவர் சிலர் இவற்றைச் சேர்த்துக் குழப்பி வருகின்றனர்.

தேசிய விடுதலைக் கிளர்ச்சிக் காலத்தில் அதை ஆதரித்தவர்களும் ஆதரிக்காதவர்களும் இருந்தனர். ஆதரிக்காதவர்கள் பெரும்பாலும் பண்டைய நாகரிகச் சிறப்பையும் மரபுரிமைகளையும் மொழிப் பற்றையும் இனப் பற்றையும் வளர்த்தவர்களாவர். அவர்களுக்கு இவை இயல்பாகி விட்டிருந்தன. ஆனால், இவர்களிடமிருந்து முரண்பட்டவர்கள் இந்நிலத்தில் வாழ்ந்து வருங் காரணியத்தால் இந்நில மக்களின் தாய்மொழியாம் தமிழ்மொழிப் பற்றை உடையவர்களாகவும் அதை வலியுறுத்துகிறவர்களாகவும் தம்மை ஆக்கிக் கொண்டார்கள். இப்பின்னணியிலேயே அவர்கள் தமிழைப் பற்றிய கருத்துகளைக் கூறி வந்தனர். அவர்தம் தமிழ்ப்பற்று மேம்போக்கானதேயாம்.

தமிழில் நல்ல சொற்களிருக்கும் போது அவற்றை விடுத்துப் பிற சொற்களைக் கலந்து எழுதுதல் கூடாது' என்று அவர்களிற் சிலர் கூறி வந்தனர், ஆனால், எள்ளளவும் கடைப்பிடிக்கவில்லை. பரிதிமாற்கலைஞர், மறைமலையடிகளார் காலத்தவராயிருப்பினும் தாம் எழுதிய நூல்களில் தனித்தமிழைக் கடைப்பிடிக்கவில்லை. பாரதியாரும் அவ்வாறு செய்யவில்லை! பாரதி எழுதிய தமிழ் உரை நடையிலும் பாட்டிலும் அளவற்ற கலப்பிருந்தது. ஆனால், அவரும் பிற சொற்களைப் பயன்படுத்தக் கூடாது என்று ''அறிவுரை'' வழங்கியிருக்கிறார்.

பாரதியின் எழுத்து வருமாறு:

''தேகி முதம் தேகிஸ்ரீ ராதே, ராதே! [1]
ராக ஸமுத்ரஜாம்ருதே ராதே ராதே!
ராஜ்ஸ்ரீ மண்டல ரத்ந ராதை ராதை!

1. மகாகவி பாரதியார் கவிதைகள் பக். 137, அருணுபதிப்பகம்.

போக ரதி கோடி துலயே ராதே ராதே! ஜய ஜய (தேகி)
பூதேவி தப பல ராதே ராதே!
தேவ மஹா மந்த்ர ரஸ ராதே, ராதே!
வேத வித்தியா விலாஸிணி ஸ்ரீ ராதே, ராதே!
ஆதி பரா சக்தி ரூப ராதே, ராதே!
அத் யத்புத ச்ருங்க ரமய ராதே, ராதே!'' (தேகி(

இந்தப் பாடலில் தமிழ்ச் சொல் எங்கே யிருக்கிறது என்று தேடிப் பாருங்களேன்!

இப்பாட்டையும் இது போன்ற இன்னும் பல பாடல்களையும் படிப்பவர் இவை பாரதியாரின் பாடல்கள்தாமா? என்று விழிப் பார்கள் என்பது உறுதி! இவர்தாம் பாரதியார்!

தமிழில் மேலை அறிவியல்கள், புத்தம் புதுக் கலைகள் வர வேண்டும் என்று பார்ப்பனர்களோடு சேர்ந்து பலர் கூறி வந்தனர். ஆனால், அதற்காக அவர்கள் எவ்வாறு உழைத்தனர்?

'பிராணவாயு, ஜலவாயு, கரியமிலவாயு, நியாயஸ்தலம், காரியஸ்தர், அக்ராசனர், ராஷ்டிரபதி' என்னும் வகையில்தான் அவர்களின் திருவிளையாடல்கள் நின்றன.

தமிழில் எல்லாம் வர வேண்டும் என்று கூறிய அவர்கள், கோயில் வழிபாடு தமிழில் நிகழவேண்டும் என்றோ, திருமண நிகழ்ச்சிகள் தமிழில் நடைபெற வேண்டும் என்றோ கூறியதுண்டா? ஏன் கூறவில்லை. தமிழிசை இயக்கம் பல்லாண்டுகளாகத் தமிழ் நாட்டில் செயல்பட்டு வந்தும் இசைத்துறையில் நிரம்பி வழிகின்ற பார்ப்பன மக்கள், தமிழிசையை ஆதரிக்கக் கூட முன்வரவில்லையே ஏன்? மாறாகத் தமிழிசையை இழித்தும் பழித்தும் வருகின்றனர். சில ஆண்டுகளுக்கு முன்னர் சிதம்பரம் செயராமன் சென்னையில் நிகழ்த்திய முழுநேரத் தமிழிசையைத் 'தினமணி'யில் ஒரு பார்ப்பனர், ''முழுக்க முழுக்கத் தமிழ்ப் பாடல்களையே பாடியதனால் அது, ஓர் இசை நிகழ்ச்சி போன்றே தெரியவில்லை'' என்று நேரடியாகவே பழித்திருந்தார்! சட்டம் வந்த பிறகும் கூட, கோயில்களில் தமிழ் நுழையாதவாறு விரட்டியடித்து வருகின்றனர்!

பார்ப்பனர்கள் என்றைக்கும் தமிழ்ப் பற்றுடன் இருந்ததில்லை. தமிழை வாழ வைக்க அவர்கள் உழைக்கவில்லை. உ. வே. சா. தொகுக்கவில்லை யெனில், 'தமிழே இருந்திராதே' என்று நம்மவர் புலம்பிக் கொண்டிருப்பது வீணாகும். அவர் தொகுக்கவில்லை யென்றால் வேறு எவராவது அவரை விடச் சிறப்பாகச் செய்திருப்பார்கள்! அவர் ஒருவர் மட்டுமா பழந்தமிழ் நூல் தொகுத்தவர்?

'பதிப்புக்கலை' வளர்ந்திருக்கிற இந்நாளிலேயே தஞ்சைக் 'கலைமகள் நூலக'த்தில் நூற்றுக்கணக்கான சுவடிகள் அச்சேருமல் கிடக்கின்றன! அதுபோல் நூற்றுக்கணக்கான சிறப்பு மிக்க தமிழ்க் கல்வெட்டுக்கள் பதிப்பிக்கப் பெருமல் கிடக்கின்றன! இவையெல்லா வற்றையும் விட தமிழ்நாட்டின் முழுமையான வரலாறே ஒழுங்குற எழுதி வெளியிடப் பெறவில்லை!

'ஆடிப்பெருக்கில்' அருந்தமிழ்ச் சுவடிகளை ஓடச் செய்ததும் வடமொழியில் பெயர்த்துக் கொண்டு தமிழ் நூல்களை அழித்ததும் எவர் செய்த திருப்பணிகள்?

இன்றைக்கு மட்டும் என்ன வாழ்கிறது? இருக்கிற எல்லா ஏடு களும் அவாள்களிடந்தாம் இருக்கின்றன. என்ன செய்கிருர்கள் அவற்றைக் கொண்டு? தமிழரை முட்டாளாக்குகின்றனர், தமிழை அழிக்கின்றனர், தமிழைத் தமிழர் கண்ணெதிரிலேயே அவர்தம் பணத்தைக் கொண்டு ஒரு புதிய மொழியாக்கிக் கொண்டு வரு கின்றனர். எனினும், பாரத இராமாயணப் பரப்பல்கள் மட்டும் பழுதின்றி நடந்து வருகின்றன.

தனித்தமிழ் இயக்கம்

தனித்தமிழ் உணர்வுடன் தமிழ் நிலத்தில் ஆங்காங்கு நடை பெற்று வரும் முயற்சிகள் அனைத்தும் 'தனித்தமிழ் இயக்கம்' எனக் கருதப்பட்டு வருகிறது. இம் முயற்சிகளுக்கு மறைமலையடிகளார் தந்தையாகவும் வழிகாட்டியாகவும் விளங்கினுர். அவருக்குப் பின் அன்பர் பலர் அவர் நெறிச் செல்வாராயினர். இன்று **மொழி ஞாயிறு பாவாணர், பாவலரேறு பெருஞ்சித்திரனுர்** ஆகி யோர் தனித்தமிழியக்கத்தின் தலைவர்களாகவும் வழிகாட்டிகளாகவும் இயல்பாகவே கருதப்பட்டு வருகின்றனர்.

மறைமலையடிகளார் சிவனிய சமயத்தைப் போற்றி முறையான வழிபாடுகளுடன் கூடிய துறவு வாழ்க்கை வாழ்ந்தவராவார். பாவாணரும் பெருஞ்சித்திரனுரும் அவரைப் போல் துறவியராக வாழ்பவரல்லர்! ஆயின், தனித்தமிழியக்கம் மறைமலையடிகளாரைப் பின்பற்றவில்லை என்று கூறுவது நகத்தகும் பேதைமைத்தன்றே! அதைப் போன்றே தொடக்கக் காலத்திலோ அன்றிப் பின்னரோ அவர்களிடம் காணப்பட்ட இயல்புகளையும் போக்குகளையும் கொண்டே தனித்தமிழியக்கத்தைக் குறை கூறுதல் குற்றமாகும். மற்றவர் சிவனிய சமயத்தைக் கடைப்பிடிக்கவில்லை என்பதால் தனித்தமிழியக்கத்தின் பாதை மாறி விட்டதென்று கூற வியலுமா?

தனித்தமிழ்ப் பாதையில் எவர் சென்ருலும் நன்மை தமிழுக்குத் தான்! அவரவர் போக்குகளை வைத்துத் தனித்தமிழ் இயக்கத்தையும்

குறை சொல்லுதல் அறியாமை! இத்தகையார் அவரவரிடம் உள்ள சிறப்புகளைக் காணத் தவறி விடுவது ஏன்? கொடுநோய் நெஞ்சுடையார் இங்ஙனம் செய்து வருகின்றனர். அவர்களைப் போல் நாமும் பார்க்கத் தொடங்கினால் விளைவு பெரிதாய் விடும்!

மறைமலையடிகளார் தனித்தமிழுக்குச் செய்த தொண்டு அளப்பரியது, முழுமையானது, மாசில்லாதது, தலைமுறைக்கெல்லாம் வடிகாட்டியாய் அமைவது! தனித்தமிழ் உணர்வு ஏற்பட்ட உடனேயே வேதாசலம் மறைமலை அடிகளானார்; தாம் நடத்திவந்த 'சன்மார்க்க சங்க'த்தைப் 'பொது நிலைக் கழகம்' என்றாக்கினார்; 'ஞான சாகரம்' ஏட்டை 'அறிவுக் கடல்' என்று தனித்தமிழ்ப் படுத்தினார்; இவை போன்றே தமது பிள்ளைகளுக்கிட்டிருந்த ஞான சம்பந்தம்' என்ற பெயரை 'அறிவுத் தொடர்பு' என்றும், மகள், 'திரிபுரசுந்தரி' பெயரை 'முந்நகரழகி' என்றும், மருமகனின் பெயரான 'குஞ்சிதபாதம்' எனும் பெயரைத் 'தூக்கிய திருவடி' என்றும் தனித்தமிழில் மாற்றினார். தனித்தமிழில் எல்லாம் முடியுமென்று நிலைநாட்ட, அறிவியல், மெய்ப் பொருளியல், செய்யுள், புதினம், நாடகம், ஆராய்ச்சி, சமயம், மொழி பெயர்ப்பு ஆகிய எல்லாத் துறைகளிலும் ஈடுபட்டு நூல்களை எழுதி வெளியிட்டார். தன்னந் தனியராய்ப் பென்னம் பெரிய தொண்டுகள் புரிந்த அடிகளார்தம் மனத் தூய்மையும் ஆண்மையும் எவர்க்கு வாய்க்கப் பெறும்?

உண்மையான தமிழர் எவரேனும் அவருடைய ஆங்கில முன்னுரைக்கும் நாட் குறிப்புக்கும் குறைப்பட்டுக் கொள்ள முடியுமா? அப்படிச் செய்பவன் எதிரியாகவே கருதப்பட வேண்டும்! அடிகளார் அவ்வாறு எழுதியதனால் நமக்கு எவ்வகையான இழுக்கும் ஏற்பட்டுவிடவில்லை. பொதுவுடைமைக் கட்சியாளராகிய சீவானந்தம் எழுதிய நூலில் 'அடிகளார் பேசும்போது பிற சொற்களைக் கலந்தே பேசுவார்' என்று எழுதியிருப்பதைக் கூறிக் கூறி நம் பகைவர்கள் தனித்தமிழியக்கத்தைப் பழிக்க முனைகின்றனர்! பெயரை மட்டுமே மாற்றிக் கொண்ட 'பரிதிமாற் கலைஞரை' ஒரேயடியாகப் போற்றி அடிகளாரைப் பழிக்கக் குற்றம் தேடிக் கொண்டிருப்பவரை என்னென்று புகல்வது?

கொள்கையும் செயலும்

"ஒரு கொள்கை என்பது எதிர்காலத்தை நோக்கியது; நிகழ் காலத்தைக் கடந்த ஒன்று" என்பதைப் பொதுவாழ்வில் உள்ளார் புரிந்து கொள்ளல் வேண்டும்.

பொதுவுடைமை பேசுகிற பெரும்பாலாரான தலைவர்கள் தமக்கென்று உள்ள உடைமைகளை யெல்லாம் பொதுவாக்கிவிடவில்லை. தமக்கென உள்ள குல உணர்

வைக் கூடக் கைவிடாமல் தத்தம் குலங்களிலேயே கொண்டு கொடுத்தலை நடத்துவதை இன்றும் காண் கிறோம்.

ஒரு நாடு விடுதலையடைய வேண்டும் என்று கூறுகிற எத் தலைவர்க்கும் உடனே நாட்டு விடுதலை கிடைத்து விடுவதில்லை. விடுதலை இயக்கம் தொடங்கிய சிறிது காலத்திலேயும் விடுதலை கிடைக்கலாம், அன்றிச் சில தலைமுறைகள் கடந்த பின்னரும் கிடைக்கக் கூடும்!

“பெண்கள் ஆண்களுக்குச் சமமாக வேண்டும்; ஆடவர் போல் உடுத்த வேண்டும்; உடைச் சிக்கனம் தேவை; பெண்கள் அரைக் கால் சட்டை அணிய வேண்டும்” என்று சீர்திருத்தக்காரர் ஒருவர் கூறினால், உடனே, அவரை அவரது மனைவிக்கு மாட்டிவிட வில்லையே’ என்று குறை கூறுதல் எவ்வளவு பேதைமை!

எந்தக் கொள்கையும் உருவானபின் மக்களிடம் பரவவேண்டும், மக்களை ஏற்கச் செய்ய வேண்டும் அதன்பின் சிறிது சிறிதாக நடை முறைக்கு வரல் இயலும். இவற்றுக்கிடையில் அக்கொள்கைக்கான விளக்கங்களும் போராட்டங்களும் நிகழ்ந்திருக்கும்!

தனித்தமிழியக்கமும் பகுத்தறிவியக்கமும் தமிழ்நாட்டில் ஆடு மிகுந்த தன்மானமிக்க தமிழறிஞர்களால் அறிமுகப்படுத்தப்பட்டன வாகையால், அறிமுகப்படுத்தியவர்களே பெரும்பாலும் அவற்றைக் கடைப்பிடித்துக் காட்டினர். தனித்தமிழ் என்றால், அதைப் பேசியும் எழுதியும் காட்டினர்; அதில் இலக்கியங்கள் படைத்தனர். பகுத்தறி வியக்கம் என்றால் சடங்குகளை ஒழித்தும் கடவுள் நம்பிக்கை இன்றியும் சமய விழாக்களைப் பிறர் நடத்தும் போதும் அவர்களிடை யில் இருந்து கொண்டும் அவற்றைக் கொண்டாடாமலும் வாழ்ந்து காட்டினர்.

நடைமுறையில் தனித்தமிழ்

மறைமலையடிகளார் பிறரிடம் பேசும்போது பிற சொற்களைக் கலந்து பேசியிருக்கக் கூடும். பேசினார் என்றால்—ஏன் பேசினார்? அவரால் இயலாமலா? அன்று! அவரோடு பேச வந்தவரின் இயலா மையைக் கருதித்தான் பேசியிருப்பார்! தனித்தமிழ் பற்றிச் சிறிதும் அறியாதாரிடம் சென்று பேசும்போது எவ்வாறு முழுத் தனித் தமிழில் பேசுவது? வழக்கமான நடையைக் கையாண்டே பேசல் இயலும். தப்பித் தவறியோ, பிறர் நன்மை கருதியோ, பிற சொற் களைக் கலந்து பேசுவதால் கொள்கை போய் விடுமா?

ஒரு கல்லூரி விழாவில் இறை வணக்கப் பாடலுக்குப் பெரி யாரும் எழுந்து நின்றார் என்பதற்காக அவர் கொள்கையை விட்டு விட்டார் என்று சொல்ல இயலுமா?

எப்படிப்பட்டவனும் இக் குமுகாயத்தில் வாழ்ந்தே ஆகல் வேண்டும். தனித்து வாழ்தல் வாழ்வன்று! தனித்தமிழன்பர் ஒருவர் காய்கறிக் கடையிலோ பொத்தகக் கடையிலோ சென்று பொருள்கள் வாங்கும்போது தனித்தமிழிலேயே பேசி அவற்றை வாங்கி வருவது பெரிய செயலன்று! தொடக்கத்தில் ஒரு 'தூவல்' கொடுங்கள் என்றால் கடைக்காரர் விழிப்பார். பின் அவருக்குச் சொல்லி, "தூவல் என்றால் பேனாங்க". இப்போது கொடுங்கள்' என்றால், மறுமுறை அக்கடைக்காரரே, 'தூவல் எப்படி ஐயா எழுதுகிறது?' என்று கட்டாயம் கேட்பார்! கடைக்காரரிடம் தொடர்பு கொள்ளக் கலப்புத் தமிழைப் பயன்படுத்துதல் தீமையன்று! இதனால் 'இலவயக் கண் காணிப்பாளர்' குதிக்க வேண்டா! நம்மை, நாம் எங்கேனும் தவறி யாவது பிற சொற்களைப் போட்டுவிட மாட்டோமா என்று மேற் பார்வை செய்கிறவர்கள்தாம் எவ்வளவு நல்லவர்கள்!

நூற்றாண்டுகளுக்கு முன்னர், மறைமலையடிகளார் காலத்தில் ஆரியர் கொட்டமும் ஆங்கிலர் கொட்டமும் தேசியக் கூச்சலும் பெருகியிருந்த காலத்திலோ "தனித்தமிழ்தான் தமிழ் அதைக் கடைப் பிடிக்க வேண்டும், கடைப்பிடியாதவரை எவ்வளவு கற்றவராயினும் எள்ளளவும் மதியேன்!" என்று கூறியதற்காக மட்டுமே அடிகளார் மேன்மேலும் போற்றிக் கொண்டாடத் தக்கவராகி விட்டார். எனவே அடிகளாரைக் குறை கூறுகிற தமிழன் செய்கை தன் முகத்தில் தானே சாணம் பூசிக்கொள்வதையே ஒக்கும்.

இன்று கடந்த காலத்தைக் காட்டிலும் தமிழின் தனித்தன்மை யைப் பேணும் ஆர்வம் பல மடங்கு பெருகியும் நடைமுறையில் வந்து கொண்டும் உள்ளது. ஆங்காங்கு உள்ள தனித்தமிழன்பர்கள் பெயர்ப் பலகைகளில் தனித்தமிழைக் கொண்டு வந்து விட்டனர்! தனித்தமிழில் ஏராளமான பலதுறை நூல்கள் வெளிவந்து கொண் டிருக்கின்றன! '**தென்மொழி**' உருவாக்கிய தனித்தமிழ்ச் சொற் களை அரசே பயன்படுத்துகிறது; பார்ப்பன ஏடுகளும் அவற்றைப் பயன்படுத்தி வருகின்றன. தனித்தமிழன்பர் நாவிலெல்லாம் தனித் தமிழ் மணக்கிறது. தனித்தமிழ் பரப்பும் வகையில் இலக்கிய அமைப்புகள் பெருகி வருகின்றன.

ஆனாலும் நாம் எதிர்பார்ப்பது போல் விரைந்த முன்னேற்றமும் விரிவான வளர்ச்சியும் கிடைககாமல் இருக்கிறது, இதற்குக் கரணியம் தமிழ் தெரியாதாரும், தமிழ்ப்பகைஞர் கைகளில் தாளிகை களும் வானொலி தொலைக்காட்சி, திரைப்படங்களும் இருப்பதால் தாம்! பள்ளிகளிலேயே பிற சொற்களை நீக்கி எழுதப் பயிற்சி யளிக்கும் வகையில் இலக்கணப் பாடம் வைக்கப்பட்டுள்ளது. தமிழ்ப் புலவர் அங்கே கவனம் செலுத்த வேண்டும். அப்பாடத்தின்

வழி, இன்றைய தாளிகைகள் புரியும் தமிழ்க்கொலையை விளங்கச் செய்ய வேண்டும்!

தெளிவான, திட்பமான, திட்டமும் ஒருங்கிணைந்த, உருப்படியான செயலும் தனித்தமிழியக்கத்தைப் பரவலாக்க உருப்பெற்று வருகின்றன. அக்கால், ‘ தனித்தமிழே மெய்த் தமிழாகும்—இதைத் தவிர்த்தே கலப்பேன் செயல் வேண்டும்?'' எனும் வினா தமிழ்நில முழுதும் கட்டாயம் எதிரொலிக்கும். தனித்தமிழ் நடைமுறையை வரவேற்கும்!

இந்நிலைகளை யெல்லாம் விளங்கிக் கொள்ளாமல் தனித்தமிழியக் கத்திற்குப் ‘பின்னணி’ கற்பிக்க முயலுவது சிறிதும் பொருத்தமற்ற உள்நோக்கம் கொண்ட செயலாகும். தனித்தமிழியக்கத்தின் மெய்ம்மையான அடிப்படைக் கருத்துகள் பல்வேறு கட்சியினரை யும் கிறித்தவம் போன்ற பல்வேறு மதத்தினரையும் சிறந்த தாக்கத் திற்குள்ளாக்கி யிருக்கின்றன. அத்தாக்கமே அவர்களை அவர்கள் சார்ந்த அமைப்புகளைத் துணிச்சலான திறனாய்வு செய்யவும் அவ் வமைப்புகளின் ஏடுகளையும் அவற்றின் ‘தமிழ்க்கொலை’த் தொண்டு களையும் கண்டு மனம் புழுங்கச் செய்து வருகின்றன. தனித் தமிழியக்கத் தாக்கமே அவர்களை அவர்தம் அமைப்புகளின்று பிரிந்து விடும் மனப்பான்மையையும் ஏற்படுத்தியிருக்கிறது என் பதே உண்மை. **தமிழ்நாட்டில் இதுவரை தோன்றி வந்த பல்வேறு இயக்கங்களும் தத்தமக்கென்று பின்னணிகளை உருவாக்கிக் கொண்டதுபோல் தனித்தமிழியக்கம் எவ் வகைப் பின்னணியையும் உருவாக்கிக் கொண்டதில்லை. இனி, அது, முன்னணியைத்தான் அமைத்துக் கொண்டு செயல்படும்.** o

---

“தென்மொழி” சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்:	12 உருபா	30 உருபா	30 உருபா
அரையாண்டுக் கட்டணம்:	6 ,,	15 ,,	15 ,,
தனியிதழ்:	1 ,,	2 ,,	2 ,,

ஓரிதழுக்கு உருபா 2 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

தமிழ், தமிழர் பற்றிய செய்திகள்

- அகநானூற்றுச் செய்யுள்கள் 56. 136 இரண்டிலும் கூறப் பெற்றிருப்பதே பண்டைத் தமிழர் திருமணமாகும்; இதில் தீவலம் வருதல் இல்லை; காணிக்கை (தட்சணை) 'புரோகிதன்' இல்லை; எரிவளர்த்தல் இல்லை. இது முற்றும் தமிழர்க்கே உரிய திருமணம் ஆகும்.

—**பி. தி. சீனிவாச அய்யங்கார்**, 'History of the Ancient Tamils.' P. 80

- பண்டைக் காலத்தில் கோயில்கள் இல்லை; (விக்கிரகங்கள்) படிமைகள் இல்லை. இவை இரண்டும் மிக்க பிற்பட்ட காலத்தி லேயே தோன்றியவை. வேள்விகள் (யாகங்கள்) நிறுத்தப் பட்ட பின்னரே இவை தோன்றலாயின. புத்தருக்கும் மகா வீரர்க்கும் பின்பே கோயில்கள் தோன்றின எனல் பொருத்தம்.

—Babu Govinda Dos's Hinduisun' P. 263, 264.

இந்தி பற்றிய நேரு உறுதிமொழி தமிழ்நாட்டிற்குப் பயன்படுமா?

நேருவின் இந்திமொழி பற்றிய உறுதிமொழி, நேரு காலத்தி லேயே சட்டமாக்கப் பெறாமையாலும், அது தம் சொந்தக் கருத் தென்று கூறி அவரே பின்வாங்கி விட்டமையாலும், அவர் காலத்தி லேயே அதன் வலிமை சற்றுக் குன்றிவிட்டது. மேலும் நேருவின் உறுதிமொழி, இந்தி பேசா மாநிலங்கள் இந்தியாட்சியை விரும்பும் வரை ஆங்கிலம் தொடரலாம் என்றும், அதற்குள் இந்தியை மேன் மேலும் கற்றுத் தேர்ச்சி பெற வேண்டுமென்றும் கூறுகின்றதே யொழிய, இந்தியை நீக்க வேண்டுமென்றும் கூறவில்லை. நேரு உறுதிமொழியை நிறைவேற்ற வேண்டுமென்று தி. மு. க. கூறு வது போன்றே தமிழ்நாட்டுப் பேராயமும் கூறுகின்றது. இரண்டிற் கும் வேறுபாடு மிகச் சிறிதே.

இந்தி வெறியர் இந்தியை உடனே அரசியல் மொழியாக்க வேண்டும் என்கின்றனர்; தமிழ்நாட்டுப் பேராயம் சற்றுப் பிந்தி யாக்க வேண்டுமென்கின்றது; தி. மு. க. மிகப் பிந்தியாக்க வேண்டும் என்கிறது. இது, ஒருவனுக்குச் சாவு, இன்றே வரட்டும் என்று ஒரு சாராரும், நாளை வரட்டும் என்று ஒரு சாராரும் நாளை நின்று வரட்டும் என்று ஒரு சாராரும் கூறுவ தொத்ததே. தமிழ்நாட்டிற்கு இந்தி கூடாது என்பதே தமிறறிஞர் கொள்கை. இந்தி பிந்தி வரினும் இன்றே வரினும் தமிழ்நாட்டிற்கு ஒன்றே. ஆரியம் கலந்த திரவிட மொழிகள் தென்மொழியின் செத்த கூறுகள். தமிழ் ஒன்றே உயிருள்ளது ஆதலால் இந்தி வந்தால் திரவிடத்திற்குக் கேடில்லை; தமிழுக்கோ இறப்புண்டாம்.

—**பாவாணர். 'இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்?', பக். 36-37.**

நாடுபிடி ஓநாய்த் தன்மைக்கு இயைபானதாய் இராது எனக் கருதும் சோவியத்து அரசு, அடக்கு முறையை மேற்கொள்ள இந்தியாவுக்கு அணுக்கருவிகளை வழங்கவும் அணியமாய் நின்ற போதும், அஞ்சாமல் திரண்டு நிற்கும் அசாமியர் விடுதலைப் போர் நம் எண்ணத்தையும் கருத்தையும் ஈர்க்கிறது. நம் வீர வாழ்த்து களை அவர்கட்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். மக்கட் பகை அரசான இந்திய அரசு அசாமில் படைகளைக் கொண்டு சென்று குவித்து வைத்திருப்பது தன் அழிவுக்கு வழி ஏற்படுத்திக் கொள்வ தாகத்தான் முடியும். ஆனால் தான் அழிவதற்கு முன் ஒரு பெரும் மக்கட் குமுகத்தை வேட்டையாட விரும்பினால், அது நல்லுள்ளம் கொண்டோர் அனைவராலும் கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

தமிழினத்தின் அடிமனக் கிடக்கையை வெளிப்படுத்தி, தமிழ் நிலத்து விடுதலைக்காக அவ்வப்பொழுது குரல் எழுப்பி வரும் **தென்மொழி**, நம்மைப் போல் அடக்கப்பட்டதான அசாமிய இனத் தின் விடுதலைக்குத் துணையாகத் தனது தூவலைப் பயன்படுத்த வேண்டும் என விரும்புகிறோம். தமிழின விடுதலைப் போர் மறவர்கள் விடுதலைக்காகப் போராடும் ஒவ்வொரு தேசவினத்தையும் வரவேற்ப வர்களாய் இருப்பதில் தவறேதுமில்லை என நம்புகிறோம்.

—**இவ்வண், 'நெப்ப'** கோவை—18.

0:780: அன்புள்ள ஐயா, வணக்கம். தங்களுக்குச் சில கருத்துகள் என்று திரு. ச. தமிழ்வேலன் அவர்கள் தென்மொழி சுவடி-*16*; ஓலை-8-இல் குறிப்பிட்ட கருத்து எண் 5-இல் தென்மொழி அன்பர்களை ஒன்று கூட்டிக் கூட்டுறவு முறையில் நாளிதழ் நடத்த லாம் என்றும், அதை—நடத்துவதற்கான சில வழி வகைகளும் குறிப்பிட்டிருந்தார்கள். அவர் கூறிய கருத்தின்படி கூட்டுறவுப் பங்குகளை அறிவித்துத் தென்மொழி அன்பர்கள் அவர் அவர்களால் இயன்ற பங்குகளை பெற்று நாளிதழ் நடத்துவதற்கான வழிமுறை களைச் செய்யலாம். இதற்கான கருத்துகளைத் தென்மொழி அன்பர் களை அஞ்சல் வழியாகவும், ஐயா அவர்கள் நாள் ஒன்றினைக் குறித்து அன்று தங்கள் தலைமையில் கூடி இதற்கான வழிவகை களை ஆய்வு செய்யலாம். மேலும் அங்காங்கு உள்ள தமிழ் இயவங் களின் உதவிகளை நாடவும் வழி செய்யலாம். ஐயா, அவர்கள் தங்கள் திருவுளத்தால் என் சிறிய கருத்தை ஆய்வீர்களா?

தங்கள் தலைமையில் விரைந்து செயல்படுதல் தேவை. அதை விடுத்து, இனியும் காலங்கடத்துதல், இன்று வளர்ந்து வரும் கசப் பான சுற்றுப்புறச் சூழ்நிலைகளில் தமிழன் என்றுமே தலையெடுக்க முடியாத நிலைக்கு வந்து விடுவானோ என்று அஞ்சவேண்டியுள்ளது. நலிந்து வரும் தமிழினத்தின் நலங்காக்க வழி செய்யுங்கள் ஐயா.

—**குறளடியான் (இரா. சுதாகர்)** சென்னை-58.

0:781: ஒண்டீந் தமிழே உயிராய் மூச்சாய் உடலாய் இயங் கும் பல்கு தமிழ்ப் பாவலரேறு ஐயா அவர்களுக்கு, எம் இனிய வணக்கம். "தனித்தமிழே வாழ்க்கை!"—"தளராத கடைப்பிடிப்பே கொள்கை!" என்று எழுத்தாலும் பேச்சாலும் 'வீர' முழக்கமிடும் நம் **தென்மொழி** அன்பர்களில் ஒரு சிலர் (அல்லது ஒருவர்), பச்சோந்தியின் இயல்புடையராய்ப் பிற இதழ்களில் பிற மொழி

கலந்து எழுதி வரும் செயலுடையவராய் உள்ளனரென்று என் கணிப்பில் அறிகின்றேன்.

"போலிகள் வாழ்கின்ற காலமிது—தம்பி
புன்மை செறிந்துள்ள காலமிது!"

"திருக்குறட் பாக்கள் முழக்கிடுவார்—நன்மை
தீமைகள் ஆய்ந்து வழக்கிடுவார்!"

"தூய்மையர் போலப் பிதற்றிடுவார்—அவர்
தோதுகள் கண்டுளம் தெளிக தம்பி!"

என்னும் **பள்ளிப் பறவைப்** பாடலுக்கொப்ப, போலியராகவும், கலப்பு நடைப் புன்மையராகவும் பாலில் பாகில்—வெண்ணெயில் கலப்பதைப் போன்று, தூய தமிழில் முழக்கமிட்டுச் சிறப்பு மடல் தீட்டிப் புகழ் கொள்ளும் உயர்திரு. பெரு. தமிழ்வேந்தன் (பவானி நீர்த்தேக்கம்) அவர்களின் பெயரிலேயே, கடந்த 1-4-1980 **'விசிட்டர்'** இதழில் கலப்பு நடையில் எழுதியுள்ள மடல் வெளியாகியுள்ளது. மேலும் 1-5-1980 'விசிட்டர்' 'வாசகர் பக்க'த்தில், கலப்பு மொழியில் புதுப்பாப் பாடும் பாவலர் தமிழன்பனின் பாடல்களைச் சிறப்பித்து: **"சமூக** இலக்கியப் பக்கத்தில் வெளிவந்த தமிழன்பனின் **கவிதை** அருமையான கருத்துச் செறிவுடையது. இதழ்தோறும் இதுபோன்ற **கவிதைகள்** வெளிவரட்டும்" எனத் தீட்டியுள்ளார்!

தென்மொழி அன்பராகிய 'பெரு. தமிழ்வேந்தன்'தாம் பைந்தமிழ்ப் படுகொலை இதழிலும் எழுதுபவரா? அல்லது அவர் வேறு பிறரா? என்பதை அறியச் செய்ய வேண்டுகிறேன். அன்புமிகு,

—**குமர. நடவரச ஈவப்பன்**, 'தனித்தமிழ் ஈவகம்'—சித்தோடு.

0:782: பேரன்புக்குரிய ஐயா, அவர்கட்கு வணக்கம். தினமணி இதழ்க்கு எழுதிய மறுப்பு மடல் படி இது: அன்புடையீர், வணக்கம்! 20-4-80 'தினமணிச் சுடரில்', **பெருஞ்சித்திரனார் பாடல்கள், 'கனிச்சாறு'**—மதிப்புரையைப் படித்தோம். அதில் 'வடமொழிக்கும் தாயாகி நின்றவளே! எனும் அடிகள், உணர்வு வயப்பட்டு உரைக்கப்பட்டுள்ளதாகக் குறிக்கப்பட்டிருந்தது. உண்மை அஃதன்று. நடுநிலை நின்று, அறிவியல் முறைப்படி, ஆராய்ந்து பார்த்தால், சமசுக்கிருதம் எனும் வடமொழியில் ஐந்தில் இருபகுதி ஆரியச் சொற்களும், ஐந்தில இருபகுதி திராவிடச் சொற்களும் ஐந்தில் ஒருபகுதி இடுகுறிச் சொற்களும் ஆகும் என்பது புலப்படும். தமிழ், திராவிட மொழிகளின் தாயும், வடமொழிக்கு மூலமும் ஆகும் என்பது மொழி நூலாரின் முடிபு ஆகும். நீங்கள் அண்மைக்கால மொழி நூல் வளர்ச்சியின் புதிய உண்மைகளை அறிகிலீர் போலும்! இவ்வுண்மையின் விரிவைத் தமிழக அரசின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட நெறியாளரும் மொழியியல் மூதறிஞருமான உயர்திரு. ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களின், 'வடமொழி வரலாறு,' The primary classical language of the world முதலிய நூல்களில் காண்க!

—**ந. முத்துக்குமரன்**, பல்லடம்.

தென்மொழி மின் அச்சகம், சென்னை 600005 (தமிழகம்)